விலை ரூபா: 8.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்:- பன்னிரண்டு

புதுப் பொலிவுடன் திருநெல்வேலியில்
WESTERN UNION பணப் பரிமாற்றம்
* விரைவானது * பாதுகாப்பானது * நம்பகமானது
இப்பொழுது உலகின் எப்பாகத்திலிருந்தும் மிக துரிதமாக பணத்தினை பெற்றுக்கொள்வதற்கு
♦பணம் பெறுவதற்கு வங்கிக்குப் போகத் தேவையில்லை
♦வங்கிக் கணக்கு அவசியமில்லை
♦நீடிக்கப்பட்ட சேவை நேரம்
♦365 நாள் சேவை
♦10 (MTCN) இலக்கங்களைப் பெற்றவுடன் எம்மை நாடவும்
THIRUMURUGAN COM NET
T.P. 021 2227310
021 2227555
021 2227560
FAX 021 2227310
E-mail: thirumurugan@eudoramail.com
46, ஆடியபாதம் வீதி, (ப.நோ.கூ.ச. முன்பாக) திருநெல்வேலி யாழ்ப்பாணம்

### கிழக்கில் நிவாரணப் பணிகளை முன்னெடுக்க

## அமெரிக்க கடற்படை கப்பல் அம்பாறைக்குச் செல்கிறது!

(கொழும்பு)

அம்பாறையில் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்காக அமெரிக்கக் கடற்படைக் கப்பல் ஒன்று கிழக்கு மாகாணம் நோக்கி புறப்பட்டுள்ளது.

30 தொன் நிவாரணப் பொருட்களை வழங்குவதற்கென 800 கடற்படையினருடன் 3 உலங்கு வானூர்திகளை ஏற்றிக்கொண்டு யு.எஸ்.எஸ். டுலுத் என்ற அமெரிக்கக் கப்பல் நேற்று புறப்பட்டுள்ளது.

3 உலங்கு வானூர்திகளையும் பயன்படுத்தி நிவாரண விநியோகத்தை மேற்கொள்வதே இப்பயணத்தின் நோக்கம் என அக் கப்பலின் கொமாண்டர் லாரி கிறிப்பின் தெரிவித்தார்.

சுனாமி அனர்த்தத்தினால் வீதிகள் சேதமடைந்துள்ளன. இதனால் நிவாரண விநியோகத்தை மேற்கொள்வதற்கு போதிய வசதி

(12 ஆம் பக்கம் பார்க்க)

### கடற்படை அதிகாரி மர்மமான முறையில் மரணம்

### ஊர்காவற்றுறை முகாமில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை கடற்படை முகாமில் பணியாற்றிய கடற்படை அதிகாரி ஒருவரின் சடலம் நேற்று அதிகாலை யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டது.

சடலத்தின் தலைப்பகுதியில் துப்பாக்கிச் சூட்டுக் காயம் காணப்பட்டது. பிரஸ்தாப அதிகாரி தன்னைத்தானே சுட்டு தற்கொலை செய்து கொண்டாரா என்பது குறித்து கடற்படையினருடன் இணைந்து ஊர்காவற்றுறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

முதியான் சேயஸி வீரபண்டார (வயது 25) என்ற கடற்படை அதிகாரியே மரணமானவராவார்.

இவரது சடலம் மரண விசாரணையின் பொருட்டு காங்கேசன்துறை கடற்படை முகாமுக்கு எடுத்துச் செல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (ச-08-04)

### நிவாரணப் பணிகளில் கூட்டிணைவு

# அரசு - புலிகள் சமாதான முயற்சி விரைவில் மீண்டும் ஆரம்பமாகும்!

### சமாதான செயலகப்பணிப்பாளர் ஜயந்த தனபால நம்பிக்கை

(கொழும்பு)



அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையிலான சமாதானப் பேச்சுவார்த்தை மீண்டும் மிக விரைவில் ஆரம்பமாகும்.

இவ்வாறு அரசின் சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

சுனாமி அனர்த்த நிவாரணப் பணிகளில் இணைந்து செயற்பட இரு தரப்பும் ஆர்வம் காட்டி வருவதும், மீண்டும் ஒரு போரில் ஈடுபடுவதில் இருதரப்பும் அக்கறையற்று இருப்பதும், சமாதான நகர்வுக்கான வெளிப்பாடே என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

### முல்லைத்தீவு அழிவுகளை கனேடிய எம்.பி. பார்த்தார்

(கிளிநொச்சி)

கனடிய அரசின் நிதியுதவிகள் அரசிடமோ விடுதலைப் புலிகளிடமோ நேரடியாக கையளிக்கப்பட மாட்டாது என கனேடிய நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர் ஜிம் கரியானிஸ் தெரிவித்தார்.

தொண்டர் நிறுவனங்கள் ஊடாக வழங்கப்படும் இந் நிதி உதவிகளை அரசிற்கும், வடக்கு கிழக்குப் பகுதிகளுக்கும் சமமாகப் பகிர்ந்தளிப்பதற்கு தாம் உறுதியளிப்பதாக அவர் கூறினார்.

நேற்றுக் காலை முகமாலை வழியாக வன்னிக்கு பயணம் செய்த அவர், ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு பிரதேசத்தை நேரில் சென்று பார்வையிட்டார். பின்னர்,

கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் சமாதான செயலகத்தில் நண்பகல் 12 மணியளவில் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேசினார்.

அதன்பின் கருத்துக் கூறுகையிலேயே அவர் அதனைத் தெரிவித்தார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

**உள்ளே**

**வர்ணக் கலண்டர் தவறாது கேட்டு வாங்குங்கள்.**



நேற்றுக் கிளிநொச்சிக்கு சென்ற கனேடியப் பாராளுமன்ற உறுப்பினர் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனுடன் கலந்துரையாடுவதை படத்தில் காணலாம்.

### பாதிக்கப்பட்ட மக்களுக்கு பாகுபாடின்றி உதவி வழங்குக

### ஐரோப்பிய ஒன்றியம் இலங்கை அரசுக்கு அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண உதவிகளினை சகலருக்கும் கிடைக்கும் வகையில் ஒழுங்குபடுத்தி வழங்குமாறு ஐரோப்பிய ஒன்றியம் அரசாங்கத்திற்கு அறிவுறுத்தியுள்ளது.

நேற்று ஐரோப்பிய ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது.

அரசியலுக்கு அப்பாற்பட்டு, மதத்திற்கு அப்பாற்பட்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை மேற்கொள்ள வேண்டும்.

நாட்டில் சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் கட்டியெழுப்புவதன் மூலமும் சர்வதேச சமூகத்தின் நல்லபிப்பிராயத்தையும் பேண முடியும். பாதிக்கப்பட்ட மக்களுக்கு மனிதாபிமான நிதியுதவிகளை சரியாக வழங்குவதன் மூலம் சமாதான நகர்வில் காணப்படும் எதிரான தாக்கத்தை

(12 ஆம் பக்கம் பார்க்க)

### அரசின் நிவாரண திட்டத்துக்கு ஐ.தே.க. ஆதரவு வழங்கும்!

(கொழும்பு)

சுனாமி பேரலையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக அரசாங்கம் முன்னெடுக்கப்படும் குறுகிய கால நிவாரண வேலைத் திட்டங்களுக்கு ஐக்கிய தேசியக் கட்சி பூரண ஆதரவு வழங்கும்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

சுனாமியினால் கரையோரப் பகுதிகளில் ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் குறித்து நன்கு ஆராய்ந்த

(12 ஆம் பக்கம் பார்க்க)

### எழிலனை சோதனையிட முயற்சி கட்டைபறிச்சானில் முறுகல்

(திருகோணமலை)

வன்னி நோக்கிப் புறப்பட்ட திருமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலனை கட்டைபறிச்சான் இராணுவச் சோதனைச் சாவடியில் சோதனை செய்ய முற்பட்ட சமயம் அங்கு முறுகல் நிலை ஏற்பட்டது.

அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் கிளிநொச்சி நோக்கி வான் ஒன்றில் அவசரமாக புறப்பட்டுச் சென்றார். இந்த வான் கட்டைப் பறிச்சான் இராணுவ சோதனைச் சாவடியினை அடைந்த போது அங்கு காவலில் இருந்த படையினர் எழிலனின் பிரயாணப் பையினை

(12 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# சுனாமியால் உயிரிழந்த குடும்பங்களுக்கு

# யாழ்.தேசிய எழுச்சிப் பேரவை நிதியுதவி

(யாழ்ப்பாணம்)

சுனாமி பேரலையால வடமராட்சி பகுதியில் உயிரிழந்த குடும்பங்களுக்கு அவசர நிதியுதவியினை யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை வழங்கி வருகின்றது

சுனாமி பேரலையால் வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, குடத்தனை, மணற்காடு பகுதிகளைச் சேர்ந்தவர்கள் இருநூறு பேர் வரை உயிரிழந்துள்ளனர். இவர்களது குடும்பத்தினரை தேசிய எழுச்சிப் பேரவையினர் பார்வையிட்டு வருகின்றனர்.

முதற்கட்டமாக கடந்த ஞாயிற்றுக்கிழமை வல்வை சிதம்பராக் கல்லூரியில் தங்கியுள்ள ஏழு குடும்பங்களுக்கு தலா ஐயாயிரம் ரூபா வீதம் வழங்கப்பட்டது. அதிகம் பாதிக்கப்பட்ட உயிரிழப்பை சந்தித்த குடும்பங்களைச் சேர்ந்த இ.தனலட்சுமிக்கு இருபத்தையாயிரம ரூபா வழங்கப்பட்டது.

இதேபோன்று கடந்த திங்கட்கிழமை வட.இந்து மகளிா வித்தியாலயத்தில் தங்கியுளள பன்னிரெண்டு குடும்பங்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டது. இதில் மனைவியையும் மூன்று பிள்ளைகளையும் பறிகொடுத்த ஜெயந்தராசன் என்பவருக்கு ரூ.20000 வழங்கப்பட்டது.

மேற்படி நிதியுதவி தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் சூ.சிறில், பெருளாளர் பா.சிவராசா, ஊடகப் பேச்சாளர் ப.கணகலிங்கம், வடமராட்சி பகுதி தேசிய எழுச்சிப் பேரவையினர் ஆகியோா தலைமையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (து)

# பாரபட்சமின்றி நாட்டை கட்டியெழுப்ப வேண்டுகோள்

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள நாட்டைக் கட்டியெழுப்பும் போது தென்பகுதியைப் போன்றே வடபகுதியும் பாரபட்சமின்றி அபிவிருத்தி செய்யப்பட வேண்டுமென ஐ.தே.கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் நவீன் திசாநாயக்கா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற வைபவமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போது இதனைத் தெரிவித்த அவர்,

நம் நாடு என்ற அடிப்படையில் நாட்டைக் கட்டியெழுப்பும போது பிரதான அரசியல் கட்சிகள் அரசியல் பேதத்தை மறந்து கூட்டாகப் பாடுபட வேணடுமென்றும் இந்தச் சந்தர்ப்பத்தைத் தவற விட்டால் எதிாகாலத்தில இத்தகைய சந்தர்ப்பம் ஏற்படமாட்டாது என்றும் தெரிவித்தார். (து-8)

# இலங்கையின் வெளிநாட்டுக் கடனில் 10 வீதத்தை பிரித்தானியா வழங்கும்

(கொழும்பு)

வெளிநாடுகளுக்கு இலங்கை செலுத்த வேண்டியுள்ள வெளிநாட்டுக் கடன்களில் பத்து வீதத்தைச் செலுத்த பிரித்தானிய அரசாங்கம் முன்வந்துள்ளது.

கொழும்பில் கடந்த புதனன்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய பிரித்தானிய உயர்ஸ்தானிகர் ஸ்ரீபன் இவான் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஆசிய வலயத்தில் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கபட்ட நாடுகளுக்கு பிரித்தானிய அரசாங்கம் இதுவரை வழங்கியுள்ள நிதி உதவி 75மில்லியன் ஸ்ரேலிங் பவுண்களாகும் என்றும், சுனாமி அனாததத்தினால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு வழங்க இருககின்ற நிதியில் பெருமளவான தொகை இலங்கைக்கு வழங்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (து-08)

# யாழ்.மாவட்ட நிலைபற்றி இந்திய தூதுவருக்கு யாழ். இராணுவத் தளபதி விளக்கமளிப்பு

இலங்கைக்கான இந்திய தூதுவர் அடங்கிய குழுவினர் கடந்த செவ்வாய்க்கிழமை காலை பலாலி விமான நிலையததில் வந்திறங்கியபோது யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல எஸ.டி. தெண்ணகோன், வடக்கு கடற்படை தளபதி றிய அத்மிறல் எல்.டி. தா்மபிரிய, யாழ். மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் டி.எஸ். ஆர்.வானகுரு மற்றும் அரசாங்க அதிா் கேகணேஸ ஆகியோர்களினால் வரவேற்கப்பட்டனர். இவருக்கு யாழ்.பாதுகாபபு தளபதியினால், யாழ்.பிரதேசத்தில் கடல் கொந்தளிப்பினால் அழிவுற்ற பகுதிகள், மரணித்தவர்கள், காயப்பட்டவர்கள் இராணுவ, பொதுமக்களின் விளக்கம், இடம்பெயர்ந்தவர்களின் நிவாரண நிலையம் மற்றும அழிவு சம்பநதமாக விளககமளிக்கப்பட்டது. 515வது கட்டளை பிரதேசத்தில் அமைந்துள்ள மாவடிபுரம் கோயிலில் நடைபெற்ற பூசையில் கலந்து. கொண்டு பின்னா, அக்குழு பொனாலை நீர் ஊற்றையும் பார்வையிட்டது. அன்று மாலை அக்குழு 524ஆவது கட்டளைப பிரதேசத்தில் வைத்து கட்டளையிடும் அதிகாரி கேணல் கே. எஸ்.ரட்ணாயக்காவினால் வரவேடகப்பட்டதுடன், சுனாமி அனர்த்ததினால் இடம்பெயர்ந்த மக்களுககு பகிர்நதளிப்பதற்காக இந்திய அரசாங்கத்தினால் எடுத்து வரப்பட்ட 12தொன் நிறையுள்ள அத்தியாவசியப் பொருட்கள் அடங்கிய பொதி தூதுவரினால சாரதா சேவாச்சிரம முதல்வர் சித்ருபானந்தாவிடம் கையளிக்கப்படடது. அதன பின் அவர் யாழ். நல்லூர் கோயிலில் இடம்பெற்ற பூசை வழிபாட்டில் கலந்துகொண்டதுடன், யாழ்.பொது நூலகத்தையும் பார்வையிட்டார்.

# மன்னாரில் நிதி சேகரிக்க தே.எ.பேரவை நடவடிக்கை

(மன்னார்)

மன்னார் தேசிய எழுச்சிப் பேரவை சுனாமி பேரலைகளினால் பாதிக்கப்பட்ட தமிழ் பேசும் மக்களுக்கு உதவும் முகமாக நிதி சேகரிப்புத் திட்டமொன்றினை ஆரம்பித்துள்ளது.

நேற்று முன்தினம் மன்னாரில் நடைபெற்ற கூட்டத்தில் இதற்கான முடிவு எடுக்கப்பட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகளின மன்னார் அரசியல் துறைப் பொறுப்பாளர் வசந்தன், நிர்வாகப் பொறுப்பாளர் முடியரசன், தேசிய எழுச்சிப் பேரவையின் இணைப்பாளரும், தொழிற் சங்கங்களின் இணைப்பாளருமாள ஈழப்பிரியன், மகளிர் அணி பிரதேசப் பொறுப்பாளர் கவிமதி, வெகுஜன ஒன்றியத் தலைவர் சிந்தாத்துறை, மன்னார் மாவட்ட பொருண்மிய இணைப்பாளர் றெஜி உட்பட 100பேர் இதில் பங்கேற்றனர்.

இதன்போது சுனாமிப் பேரலைகளினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 2ஆம் கட்ட உதவிகளை வழங்குவதற்கான நிதி சேகரிப்பிற்காக தனியார் வங்கியொன்றில் கணக்கொன்றை ஆரம்பிப்பது என்றும் முடிவு எடுக்கப்பட்டது. (ப-04)

## மூன்று மாதத்துக்குள் புதிய வீடுகள்

# பாதிக்கப்பட்ட வீடுகளுக்குப் பதிலாக வழங்க அரசாங்கம் நடவடிக்கை

(கொழும்பு)

சுனாமி பேரலை அனர்த்தத்தனால் பாதிக்கப்பட்ட வீடுகளுக்குப் பதிலாக மூன்றுமாத காலத்துக்குள் புதிய வீடுகளை நிாமாணிக்கவுள்ளதாக தேசிய நடவடிக்கை மத்திய நிலையத்தின் பணிப்பாளர் தாராடிமெல் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் கடந்த புதன் கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

புதிய வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படும் வரை பாதிக்கப்பட்ட மக்கள் தற்காலிக கூடாரங்களில் தங்கவைக்கப் படுவார்கள் என்றும் தற்போது நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளவர்கள் 25ஆம திகதியளவில் அவ்விடங்களிலிருந்து வெளியேற்றப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு தற்காலிகமாக தங்குவதற்கு கூடாரங்களும் சமையலுக்குத் தேவையான பாத்திரங்களும் வழங்கப்படும் எனவும் அவர்களுக்கு மாதாந்தம் ஒரு தொகைப் பணத்தை வழங்கவும், இக் கொடுப்பனவைவிட வேறொரு கொடுப்பனவை மேலதிகமாக வழங்கவும் அரசாங்கம் தீாமானித் துள்ளதாக அவர் மேலும் கூறினார். (து-8)

# சமுர்த்தி அமைச்சு உதவி

(கொழும்பு)

சுனாமி பேரலையினால் பாதிக்கப்பட்ட மக்களில் 70 சதவீதமானோா சமுர்த்தி நலனகளைப் பெற்று வந்தவர்களாவர் என சமுர்த்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனால் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்துக்கும் 5 ஆயிரம் ரூபாவை அமைசசு நன்கொடையாக வழங்கும் என்றும் அமைச்சு அறிவித்துள்ளது.

இப்பேரவையினால் உயிரிழந்தவாகளில் 6பேர் சமுர்த்தி உத்தியோகத்தர்களாவர். அவர்களின் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் 2இலட்சம் ரூபா உதவித்தொகை வழங்கப்படும் என்றும் சமுர்த்தி இயக்கத்தைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட 300 உத்தியோகத்தாகளின் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்றும் அமைச்சு அறிவித்துள்ளது. (ப-04)

# ஆலோசனைகளை ஆழ ஆராய்ந்தே அரசிற்கு நாம் ஆதரவளிப்போம்

## முன்னாள் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தகவல்

(கொழும்பு)

சுனாமியால் பாதிக்கப்படடோருக்கு உதவுவதற்கான அர



சாங்கத்தின் ஆலோசனைகளை மிகவும் ஆழமாக ஆராய்ந்த பின்னரே ஐக்கிய தேசியக் கட்சி அரசின் திட்டங்களுக்கு ஆதரவினை வழங்கும் என ஐக்கிய தேசியக்கட்சியின் ஊடகப் பேச்சாளர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

சுனாமியினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்தவர்களின் வாழ்க்கைத் தரத்தினை வழமைக்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் குறித்த ஆலோசனைகளை எதிர்க்கட்சித தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளார்.

இவ் யோசனைகள் தொடர்பாக ஜனாதிபதியின் கவனம் திரும்பியுள்ளது.

பாதிக்கப்பட்டவர்களுக்காக கிடைத்துள்ள நிதியுதவி நேரடியாக அவர்களுக்கு கிடைக்கும் வகையில் திட்டமிடப்பட வேண்டும் எனவும் அந்த யோசனைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிதியுதவிகள் மனிதாபிமானப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகவே கிடைத்துள்ளன. இதற்கே நாம் தற்போது முன்னுரிமை வழங்க வேண்டும்.

பெரியளவிலான வேறு செயற்திட்டத்துக்கு இந்நிதியில இருந்து பாரியதொகை ஒதுக்குவது பொருத்தமற்றது என அவர் மேலும் தெரிவித்தார். (ப-4)

# இலங்கைக்கு ஜப்பான் மேலும் 10கோடி வழங்கியது

சுனாமியினால் பாதிக்கப்பட்ட இடங்களில் அவசர நிவாரண வேலைகளை மேற்கொள்வதற்காக 10கோடி ரூபாவை ஜப்பான் இலங்கைக்கு வழங்கியுள்ளது.

கொழும்பில் உள்ள ஜப்பானியத் தூதரகத்தைச் சேர்ந்த அதிகாரிகள் இதறகான காசோலையினை நிதியமைச்சின் செயலாளர் கலாநிதி பி.வி.ஜெயசுந்தரவிடம் கையளித்தனர்.

வருஙகாலததிலும் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கான மேலும் கூடுதலான உதவியினை ஜப்பானிய அரசாங்கம் வழங்கும் என எதிாபார்க்கப்படுகின்றது.

இதேவேளை, உடனடி நிவாரண வேலைகளுக்காக ஜப்பான் ஏற்கனவே 30கோடி ரூபாவை வழங்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ப-4)

## சுனாமியால் பெற்றோரை பிரிந்துள்ள

# சிறுவர் உரிமைகளைப் பேண யுனிசெவ் அமைப்பு நடவடிக்கை

இலங்கையில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தினால் 858 சிறுவர்கள் தமது பெற்றோரிடமிருந்து பிரிந்து வாழ்வதாக யுனிசெவ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இத்தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இதன்படி மட்டக்களப்பில் மாத்திரம் 346 சிறுவர்கள் தமது பெற்றோரைப் பிரிந்துள்ளனா.

இதேவேளை, நாடுமுழுவதும் சுனாமி காரணமாக பெற்றோரில் தந்தையை, தாயை இழந்த சிறுவர்களின் எண்ணிக்கை 3 ஆயிரத்து 202ஆகும்.

இந்த நிலையில் தற்சமயம் யுனிசெவ் நிறுவனம் சிறுவர்களைப் பாதுகாக்கும் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது.

சிறுவர் துஷ்பிரயோகம், சிறுவர் கடத்தல் என்பவற்றில் இருந்து சிறுவர்களைப் பாதுகாப்பதற்காக தமது உறுப்பினா்களை அதிகமாக களத்தில் ஈடுபடுத்த இருப்பதாகவும் ஊடகவியலாளர் மாநாட்டில் யுனிசெவ் நிறுவனதகின் வதிவிடப் பிரதிநிதி தெரிவித்தார். (ப-4)

# சுனாமி எச்சரிக்கை திட்டத்தை விஸ்தரிக்க அமெ.நடவடிக்கை

சுனாமி எச்சரிக்கை திட்டத்தை இலங்கையும் பயன் பெறும் விதத்தில் உலகளாவிய ரீதியில் மேலும் விஸ்தரிப்பதற்கு அமெரிக்கா தீர்மானித்துள்ளது.

பசுபிக் சமுததிர வலயத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ள இந்தத் திட்டத்தை உலகளாவிய ரீதியில் பரவலாக செயற்படுத்துவதற்கு அமெரிக்க ஜனாதிபதி புஷ் கவனம் செலுத்தி வருகின்றாா.

அமெரிக்காவின் விஞ்ஞானம மற்றும தொழில்நுட்பம் தொடர்பான கொள்கை பிரிவு இதற்கான ஆலோசனைகளை வழங்கியுள்ளது.

அண்மையில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தை கவனத்தில் கொண்டு அமெரிக்க ஜனாதிபதி இந்தத் திட்டத்தை விரிவுபடுத்த திட்டமிட்டுள்ளார். இதனடிப்படையில் உலக மயப்படுத்தப்பட்ட சுனாமி எச்சரிக்கை திட்டத்தை அமெரிக்கா செயற்படுக்கவுள்ளது. (ப-9)

# அனர்த்த நிவாரண நிதிப் பயன்படுத்தலினை உறுதிப்படுத்துவது பாராளுமன்றத்தின் கடமை

## முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப்ஹக்கீம் கருத்து



(கொழும்பு)
இலங்கைக்குக் கிடைக்கும் நிதிகளை உரியமுறையில் பயன்படுத்துவதற்கான உறுதிப்படுத்தல்களை மேற்கொள்ளும் பொறுப்பு பாராளுமன்றத்துக்கு இருப்பதாகத் தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சிகளின் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூவ் ஹக்கீம் கருத்து வெளியிடுகையில்,

பாராளுமன்றத்தின் கணக்காய்வுக் குழுவின் தவிசாளர் என்ற வகையில் எனக்கென்று சில பொறுப்புக்கள் இருக்கின்றன.

இந்தப் பாரிய அனர்த்தத்தின் பின்னர் மக்களுடைய அவசர தேவைகளைப் பூர்த்திசெய்வதற்காக அவசரமாகக் கொடுக்கப்பட்ட பண்டங்கள், பணம் குறித்த விடயங்களில் ஒரு ஒழுங்கான கணக்காய்வு செய்வது என்பது கடினமான விடயமாக இருக்கலாம்.

இருந்தாலும் அதற்கப்பால் இடைக்கால நீண்டகால புனரமைப்பு வேலைகளை ஆரம்பிக்கின்றபோது அதற்கு அந்த நிதிகளை ஒதுக்கிய அரசாங்கங்கள் மற்றும் சர்வதேச நிறுவனங்கள் இது சம்பந்தமாக ஏற்றுக் கொள்ளக்கூடிய கணக்காய்வு நடவடிக்கை பின்பற்றப்படவேண்டும் என்ற விதிமுறையையும் தெளிவாக, ஒரு நிபந்தனையாக விதிப்பார்கள்.

ஆனால் பாராளுமன்றத்திற்கு இந்தப் பொதுநிதிகளைச் செலவிடுவது சம்மந்தமாக மேற்பார்வை செய்யப்பட வேண்டிய கடமைப்பாடு இருப்பதனால் பாராளுமன்றத்தின் கணக்காய்வுக்குழுவின் தலைவராகச் செயற்படுகின்ற நான், இந்த அனர்த்தத்திற்குப் பின் கிடைத்த பணம் பற்றியும், அதனைச் செலவிடும் விதம் பற்றியும் விழிப்பாக இருக்கவேண்டும்.

இதற்காக புனரமைப்பு வேலைகளை செய்வதற்காக ஆரம்பிக்கப்படுகின்ற புதிய அமைப்புக்களை பாராளுமன்ற மேற்பார்வையின் கீழ் கொண்டு வருவது சம்மந்தமான நடைமுறையை வகுக்க இருக்கினறோம் என அவர் மேலும் தெரிவித்தார். (ப-4)

## வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)
திருக்கேதீஸ்வரம் திருவாசகம் ஸ்ரீ சபாரத்தின சுவாமிகளின் 17ஆவது குருபூசையும், வாகீச கலாநிதி எழுதிய நயினை ஸ்ரீ நாகபூசணி ஆய்வுநூல வெளியீடும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு கொழும்பு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

திருப்பணித் தவமணி சி.தியாகராசா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்குக் கிழக்கு மாகாண காணி விவசாய அமைச்சின் செயலாளர் ப.க.பரமலிங்கம், சிறப்பு விருந்தினராக பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த்துறை முன்னாள் தலைவர் பேராசிரியர் சி.தில்லைநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ப-9)

## சுனாமி கடற் பேரனர்த்தங்களால்

# பல்கலைக்கழக மாணவர்கள் 215பேர் காணாமல் போயினர்

(மருதங்கேணி)
சுனாமி கடல் அனர்த்தங்களால் பல்கலை மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் என 21பேர் வரை பலியாகி இருப்பதாகவும் 215 மாணவர்கள் காணாமற்போய் இருப்பதாகவும் பல்கலைக்கழக மாணவர் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

இதைவிட ருஹுணு பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த 12 மாணவர்களும் ஜயவாத்தன பல்கலைக்கழத்தை சேர்ந்த 13 மாணவர்களும், பேராதனை பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த நான்கு மாணவர்களும், கொழும்பு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 28 மாணவர்களும், மொறட்டுவ பல்கலைக் கழத்தை சேர்ந்த மூன்று மாணவ்களும், சப்பிரகமுவ பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 6 மாணவர்களும், தற்ந்த பலகலைக்கழகத்தை சேர்ந்த 121 மாணவர்களும், ஸ்ரீபாளி பல்கலைக்கழகத்தை சேர்ந்த 10 மாணவர்களும், பாளி பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஒரு மாணவரும் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களாவர். (ப-35)

# சுனாமி தொண்டர்களுக்கு சந்நிதியான் ஆச்சிரம உதவி

(துன்னாலை)
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினர் சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு உதவி வரும் தொண்டர்களுக்கு நாளாந்தம மதிய உணவுப் பொதிகளை வழங்கி வருகிறது.

சுவாமி மோகனதாஸால் நிர்வகிக கப்பட்டு வரும் இந்த ஆச்சிரமம் பல சமயப் பணிகளை நாளாந்தம் முன்னெடுத்துச் செல்வதுடன் அன்னதானப் பணியுடன் மேலதிகமாகப் பல பொதுப்பணிகளையும் செய்து வருகின்றது. (து-101)

## வறிய மாணவர்களுக்கு உதவும்

# "சிக சவிய" புலமைப்பரிசில் திட்டத்திற்கு விண்ணப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது

(மருதங்கேணி)
கல்வி அமைச்சின் 'சிக சவிய' புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் 2005ஆம் ஆண்டு தரம் 10 வகுப்பில கல்வி பயிலும் மாணவர்களுக்கு புலமைப்பரிசில் கொடுப்பனவுகளை வழங்குவதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்குப் பொருத்தமான மாணவர்களைத் தெரிவுசெய்து எதிர்வரும 24ஆம் திகதிக்கு முன்னர் கல்வி அமைச்சுக்கு அனுப்பிவைக்குமாறு வலயப் பணிப்பாளர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

வறுமைப்பட்ட மாணவர்கள் தமது கல்வியைத் தொடர்வதற்கு வசதியாக தெரிவுசெய்யப்படும் மாணவர் ஒருவருக்கு வருடாந்தம் ஐயாயிரம் ரூபா புலமைப் பரிசிலாக வழங்கப்பட்டு வருகிறது.

24ஆயிரம் ரூபாவுக்கு குறைந்த வருடாந்த வருமானத்தைப் பெறும் வறிய குடும்பங்களைச் சேர்ந்த 72 ஆயிரம் மாணவர்கள் இந்த புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் நன்மையடைந்து வருவதாக திட்டப்பணிப்பாளா தெரிவித்துள்ளார். (ப-35)

# சட்டவிரோத மீன்பிடிகாரருக்கு சுனாமி அனர்த்தம் விடுதலையளித்தது

(யாழ்ப்பாணம்)
2004ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் யாழ்.மேல்நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குட்பட்ட நயினாதீவு கடற் பரப்பில் வெளிநாட்டு மீன்பிடிப் படகின் தலைமைப் படகோட்டிகளாக இருந்து சட்டவிரோதமாக பிரவேசித்து மீன்பிடித்தலில் ஈடுபட்டமைக்காக இந்திய மீனவர்களான குட்டியாண்டி பரமசிவம், வீரசாமி நாகராஜ, முனுசாமி ரமேஸ் ஆகியோருக்கு எதிராக சட்டமா அதிபரினால் யாழ். மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த குற்றப்பகிர்வு பத்திரத்தை சட்டமா அதிபரின் அறிவுறுத்தலுக்கமைய அரச சட்டவாதி செல்வி. சுகந்தி கந்தசாமி, சுனாமியின் பேரழிவு காரணமாக விலகிக் கொண்டதையடுத்து யாழ். மேல்நீதிமன்ற நீதிபதி கே.பி.எஸ்.வரதராஜா குறித்த மூன்று மீனவர்களையும் விடுதலை செய்ததுடன் அவர்களது மீன்பிடிப் படகு, மீன்பிடி உபகரணங்கள், அடையாள அட்டைகளை மீள ஒப்படைத்து அவர்களை உடன் இந்தியாவுக்கு அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கும்படி யாழ்சிறைச்சாலை அத்தியட்சகருக்கு கட்டளையிட்டார். (து-19)

## பிரேசில் உதவி

(கொழும்பு)
சுனாமி பேரலைகளினால் பாதிக்கப்பட்ட இலங்கையை கட்டியெழுப்புவதற்கான நீண்டகால உதவிகளையும், நிவாரணங்களையும் வழங்க பிரேசில் அரசாங்கம் முடிவு செய்துள்ளதாக இலங்கைக்கான பிரேசில் தூதுவர் தெரிவித்துள்ளார்.

சுனாமிப் பேரலைகளினால் ஏற்பட்ட அனர்த்தங்களைப் பார்வையிட வந்த பிரேசில் தூதுவரை கட்டுநாயக்கா விமான நிலையத்தில் ஊடகவியலாளர்கள் சந்தித்து கருத்து கேட்டபோது அவர் இவ்வாறு தெரிவித்தார். (ப-08,09)

## கட்டாக்காலி மாடுகள் பிடிபட்டன!

துன்னாலை கிழக்கில் கட்டாக் காலியாகத் திரிந்த ஏல் ஆர்.குறியும சிவப்பு நிறமும், ஏன் ஏ குறியும் கறுப்பு நிறமும் அடி வயிற்றில் வெள்ளை நிறமும் கொண்ட 5 வயது மதிக்கத்தக்க இரண்டு மாடுகள் பிடிக்கப்பட்டு, உரிமைகோரப்படாத நிலையில துன்னாலை கிழக்கு கிராம அலுவலர் பொறுப்பில் உள்ளன. உரிமையாளர்கள் கிராம சேவகருடனோ அல்லது புலோலி கமநலசேவை பெரும்பாக உத்தியோகத்தருடனோ தொடர்பு கொண்டு மாடுகளை இன்றைய தினத்துக்குள் பெற்றுக்கொள்ளாவிடின் அவை ஏலத்தில் விற்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (து-101)

## சுனாமியால் சேதமடைந்த பாடசாலையில்

# பணிசெய்ய சென்றவர்களை படையினர் தடுத்ததால் முறுகல்

(துன்னாலை)
சுனாமி அனர்த்தத்தினால் சேதமடைந்து இயங்கமுடியாத நிலையில் உள்ள பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் பாடசாலையினை புனரமைக்கச் சென்ற மாணவர்கள் நேற்று முன்தினம் படையினரால் தடுத்து நிறுத்தப்பட்டனர்.

இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயத்துள் இப்பாடசாலை அமைந்திருப்பதைக் காரணம் காட்டி படையினர் மாணவர்களைத் தடுத்ததால் படையினருக்கும் - மாணவர்களுக்குமிடையே பலமணி நேரம் கடும் வாக்குவாதம் இடம்பெற்றது.

இறுதியில் படையினர் மாணவர்களை மேற்படி பாடசாலைக்குச் சென்று புனரமைப்பில் ஈடுபட அனுமதித்தனர். (ப-101)

## புங்குடுதீவிலுள்ள வறிய மாணவர்களுக்காக

# சர்வோதய நிறுவனத்தால் துவிச்சக்கரவண்டிகள் வழங்கல்

லண்டன் ஆரோபணம் சிறுவர் நிதியத்தின் உதவியுடன் வட இலங்கை சர்வோதயத்தினால் வழங்கப்படும் வறிய குடும்பச் சிறுவர்களுக்கான துவிச்சக்கரவண்டி வழங்கும் விழா நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு வட இலங்கை சர்வோதய நிலையப் பொறுப்பாளர் செல்வி.க.புஸ்பராணி தலைமையல் நடைபெறவுள்ளது.

புங்குடுதீவு, கேரதீவு, ஊரதீவு, அாியநாயகன்புலம், சங்கத்தார்கேணி, வீராமலை, தலையிட்டிற்று, ஈசனாமுற்றம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு இவை வழங்கப் படவுள்ளன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வுபெற்ற தபாலதிபர் ஆ.சுந்தரலிங்கம், சிறப்பு விருந்தினர்களாக புவியியற்துறை விரிவுரையாளர் கா.குகபாலன், புங்குடுதீவு பிரதேச அரசியல துறை பொறுப்பாளர் வீ.இசைச்செல்வன், கிராம அலுவலர் சு.வி.விநாயகமூர்த்தி, புங்குடுதீவு மகாவித்தியாலய அதிபர் கே.தர்மகுணசிங்கம், திட்ட ஒருங்கிணைப்பாளரும், ஓய்வுபெற்ற தபாலதிபருமான கே.தம்பிஜயா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ப-126)

## யு.என்.எச்.சி.ஆர். உதவி

(மருதங்கேணி)
வடமராட்சி பகுதியில் கடல் அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு யு.என்.எச்.சி.ஆர் நிறுவனம் உதவுபொருட்களை வழங்கியுள்ளது.

கடந்த வியாழக்கிழமை வியாபாரிமூலை இன்பருட்டி பகுதி மக்களுக்கு இந நிறுவனத்தால் கூடாரம், பாய், குடம், அலவாங்கு, வாளி, பிளாஸ்ரிக் பேசின் போன்ற பொருட்கள் வழங்கப்பட்டது. (ப-35)

# படிவங்களைப் பூரணப்படுத்தி ஒப்படைக்க வேண்டுகோள்

(மருதங்கேணி)
கடல் பேரனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பொதுமக்கள் அனைவரும் கிராம அலுவர்களால் விநியோகிக்கபடும் படிவத்தினைப் பெற்று அதனை பூரணப்படுத்தி தத்தமது நிரந்தரப் பிரிவுக்குட்பட்ட கிராம அலுவலரிடம் நாளை ஞாயிற்றுக்கிழமை கையளிக்குமாறு பருத்தித்துறை பிரதேச செயலர் எஸ்.வசந்தகுமார் கேட்டுள்ளார்.

அனர்த்தம் காரணமாக ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஏற்பட்ட இழப்புகள் தொடர்பில் துல்லியமான மதிப்பீடுகளை மேற்கொள்வதற்கு இவ் விபரங்கள் தேவைப்படுவதால் பாதிக்கப்பட்ட மக்கள் தாமதிக்காது தமது இழப்புக்களைக் குறிப்பிட்டு பதிவு செய்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

நலன்புரி நிலையத்தில் வசிக்கும் மக்கள் நலன்புரி நிலையத்திற்குப் பொறுப்பான கிராம அலுவலரிடமும, ஏனையோர் பருத்தித்துறை பிரதேச செயலகத்திலும் படிவங்களைக் பெற்று பூரணப்படுத்தி தத்தமது கிராம அலுவலகரிடம் கையளித்தல வேண்டும். (ச-35)

# மீள் குடியமர்த்த நடவடிக்கை

(கொழும்பு)
சுனாமி பேரலைகளின் காரணமாக இடம்பெயர்ந்த 4லட்சத்து 25 ஆயிரத்து 620பேர் தொடர்ந்தும் நலன்புரி நிலையங்களிலும், உறவினர் வீடுகளிலும் தங்கியிருப்பதாக சமூக நலன்புரி அமைச்சு தெரிவித்துள்ளது.

இவர்கள் விரைவில் மீளக் குடியமர்த்தப்படுவார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சுனாமி பேரலையின் காரணமாக இலங்கையில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 40ஆயிரத்தை அண்மித்துள்ளது.

இதுவரை 30ஆயிரத்து 899 பேரது சடலங்கள் மீட்கப்பட்டிருந்தாக தகவல்கள் கிடைத்துள்ளன.

6ஆயிரத்து 34பேர் காணாமல் போயுள்ளார்கள். இவர்களில் பலர் உயிரிழந்திருக்கலாம் என்று சமூக சேவைகள் அமைச்சு மேலும் தெரிவித்திருக்கின்றது. (ப-04)

# கோமாதாவை குலமாதாவாகப் போற்றுவோம்



சிவத்தியானத்தோடு ஆதவனுக்கு பூஜை, பொங்கல் செய்து நன்றிக்கடன் செலுத்தும் பண்பு. ஆவினததை பேணிக்காக்கும் மரவு, சூரிய பகவானின் தெட்சணஜன முடிவு, உத்தராயன ஆரம்பம், தமிழர் மனதில் மகிழ்ச்சி. இத்தனையும் ஒன்றாய் அமைவது தைப்பொங்கல்.

தமிழ் நாடடில் தைப்பெங்கல் களையடுத்து கோமாதாக்களுக்குப் பட்டிப் பொங்கலும், மறுதினம் கன்றுகளுக்குத் தனியாக கன்றுப் பொங்கலும் நடைபெறும் இலங்கையில் இடபங்கள் பசுக்கள், கன்றுகள் எல்லாவற்றிற்கும் ஒன்றாகப் பட்டிப்பொங்கல் நடைபெறும்.

தமிழரின் பண்டைய சின்னங்களில் எல்லாம் ஆவினத்தைப் பூஜைகுரியனவாக வழிபட்டுப் போற்றியமையைக் காண்கிறோம். சுமேரிய நாகரிகம் திகழ்ந்த குமரிக்கண்டத்தில் பசுபதிநாதர் பசுக்கூட்டங்கள் மத்தியில் வைத்தப் பூசிக்கப் பட்டதாகக் கூறப்படுகிறது.

திராவிடப் பண்பாடாகிய சிந்துவெளியில் எருதும் பசுவும் பண்பாட்டின் உயர் நிலையில் வைத்துப் பேணப்பட்டுள்ளன. இருக்கு வேதம் 'பசு' அன்னை உருத்திரர்க்கு அரும்புதல்வி வசுக்களுக்கு, மின்னும் ஆதித்தியர்க்கு விருப்பமிகு தங்கை, அமிழ்துண்ணுமிடம் அறத்தின் தோற்றம் இல்லத்தில் விருந்தினன், இன்னல் புரியாதீர் எனப் பசுவை என்றும் காக்குமாறு போற்றப்படுகிறது.

பணடைத் தமிழரின் நூலான புறநானூறு 'ஆவும் ஆனியற் பார்ப்பன மக்களும் பெண்டிரும் பிணியுடையீரும்...' போரின் போது கொல்லப்படக்கூடாது எனக் கூறியிருப்பதைக்காண்கின்றோம். சம்பந்தர் 'வாழ்க அந்தணர் வானவர் ஆவினம்' எனப் போற்றியுள்ளார்.

நாவுக்கரசர் 'ஆவினுக் கருங்கலம் அரணஞ் சாடுதல்...' என்கிறார் திருமூலரை நமக்குத் தந்தவை பசுக்கூட்டங்களே. மூவாயிரத் தமிழில் பசுவைப் பேற்றுகிறார். யாவரும் ஒரு பிடி புல்லையாவது பசுவுக்குக் கொடுத்து புண்ணியத்தை சேர்க்குமாறு கூறியுள்ளார்.

பண்டைத்தமிழர் பண்பாட்டினை நன்குணர்ந்த புரட்சிக் கவிஞர் பாரதியார் கூட 'பாலைப் பொழிந்து தரும் பாப்பா- அந்தப் பசு மிக நல்லதடி பாப்பா' என்றும் வண்டி இழுக்கும் நல்ல குதிரை நெல்லு வயல் உழுது வரும் மாடு அண்டிப்பிழைக்கும் நம்மை ஆடு- அதை ஆதரிக்க வேணுமடி பாப்பா என சிறு பிள்ளைகளையே உயிரினங்களைப் பேணும் முறையைப பாடியுள்ளார்.

இத்தனைக்கும் மேலாக தனது குருதியையே பாலாக்கி நமக்குத் தரும் பசுவை சிவன், உமை, பிள்ளையார், முருகன், நாராயணர், ஆஞ்சநேயர், சரஸ்வதி, இலக்குமி எனப் பலதெய்வங்களும் உறையும் பசுவை நாம் இன்றைய நாளில் போற்றி வழிபடுவோம்.

தாய்ப்பால் அருந்தாத மனிதர்கள் இருக்கலாம், பசுப்பால் குடிக்காத மனிதர்கள் இல்லை யல்லவா? பசுவைக் கொல்லாது, இறைச்சியைப் புசியாது நல்லவர்களாக பண்புள்ளவர்களாக நாம் வாழவேண்டும். □

**சைவப் புலவர்**
**ச.கந்தசத்தியதாசன்**

## பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு உதவ சர்வதேச ஒன்றியம் நடவடிக்கை

சுனாமி அனர்த்தத்தினால் பாதிப்பிற்குள்ளான இலங்கை ஊடகவியலாளர்கள், ஊடக நிறுவனங்களில் கடமையாற்றும் ஊழியர்கள் மற்றும் பிரதேச ஊடகவியலாளர்களுக்கு நிவாரண உதவி வழங்க சர்வதேச ஊடகவியலாளர்கள் ஒன்றியம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இந் நிவாரணப் பணிகளை ஊடகவியலாளர்களின் சம்மேளனத்துடன் இணைந்து தெழிற்சங்க சம்மேளனம் மேற்கொண்டுள்ளது. பாதிப்பிற்குள்ளானவர்களின் பாதிப்பின் தன்மை மற்றும் விபரஙகளை, உறுதிப்படுத்தக் கூடிய நிறுவனம் அல்லது அதிகாரியொருவரின் பெயரைக் குறிப்பிட்டு பொதுச் செயலாளர் ஊடகததுறை ஊழியர் தொழிற் சங்க சம்மேளனம், லேக் ஹவுஸ் ஊழியர் சங்கக் காரியாலயம், லேக்ஹவுஸ், கொழும்பு-10 என்ற முகவரிக்கு தபால் மூலமோ அல்லது 2472407 என்ற தொலை நகல் மூலமோ ஈமெயில் மூலமோ அனுப்பி வைக்குமாறு கேட்கப் பட்டுள்ளது. (ச)

## திஸநாயக்காவின் மனநிலை

(கொழும்பு)

தம்மை விடுதலை செய்யும் நடவடிக்கைகளுக்கு காலத்தை செலவிடுவதைத்தவிர்த்து சுனாமியினால் பாதிக்கப்பட்டவர்களின் தேவைகளுக் காகக் காலததை ஒதுக்குமாறு சிறைத் தண்டனை அனுபவித்துவரும் முன்னாள் அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்க தெரிவித்ததாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

வெலிக்கடைச் சிறைச்சாலையில் எஸ்.பி.திஸநாயக்காவை சந்தித்த போதே அவர் இவ்வாறு கூறியதாக ரணில் விக்கிரம சிங்க தெரிவித்தார்.

திஸநாயக்கவை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை நாம் முன்கொண்டு சென்றோம். ஆனால் எஸ்.பி.திஸநாயக்க பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ முன்னுரிமை வழங்குமாறு கூறிய ரணில் சிறைச்சாலையில் எனக்கு வரையறுக்கப்பட்ட சுதந்திரமே வழங்கப்பட்டுள்ள தாக அவர் கூறியதாகவும் தெரிவித்தார். (ப-8)



## உள நலப்பணிகளில் ஈடுபடுபவர்கள் தகுதியுள்ளவராக இருக்கவேண்டும்

### ஜனாதிபதி சந்திரிகா ஆலோசனை

(கொழும்பு)

சுனாமி அனர்த்தங்களினால்



மனோ ரீதியாகப் பாதிக்கப்பட்டோருக்கு உளவள ஆலோசனைகளை வழங்கும் பணியில் தகுதி வாய்ந்தவர்களை மட்டுமே ஈடுபடுத்தவேண்டுமென ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தம்மைச் சந்தித்த உளவள மருத்துவர்களைக் கொண்ட தூதுக் குழுவிடம் கேட்டுள்ளார்.

கல்வித்துறை சார்ந்த அனுபவசாலிகள், மதகுருக்கள் ஆகியோரின் உதவிகளையும் நாடலாம் என்றும், அவர் இக் குழுவிடம் பரிந்துரை செய்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை, ஜனாதபதி செயலகத்தில், ஜனாதிபதியை இக் குழுவினர் சந்தித்துக் கலந்துரையாடியபோது சுனாமி அனர்த்தங்களால் அதிர்ச்சிக்கும் உளத்தாக்கங்களுக்கும் உள்ளானோருக்கு விசேட சிகிச்சையளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து இம் மருத்துவர்கள் இச்சந்திப்பில் எடுத்துரைத்தனர்.

இதையடுத்தே ஜனாதிபதி ஆலோசனை வழங்கும் பணியில் தகுதி வாய்ந்தவர்களை மட்டுமே ஈடுபடுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். (ப-9)

## தொழில் நிறுவன சேதங்களை பதிவு செய்யுமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

சுனாமி அனர்த்தத்தினால் அழிக்கப்பட்ட தொழில் நிறுவனங்கள் சம்பந்தமான மதிப்பீடுகள் மேற்கொள்வதற்கு தொழில் திணைககளத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதில் தொழில் வழங்குநர், தொழிலாளர்களுக்கு ஏற்பட்ட உயிரிழப்புக்கள், காயங்கள், காணாமல் போனோர் பற்றிய விபரங்கள் தொழில் ஸ்தாபனத்துக்கு ஏற்பட்ட கட்டட சேதங்கள், இயந்திரங்கள் மற்றும் சொதது களுக்கு ஏற்பட்ட இழப்புக்கள தொழில் ஸ்தாபனத்தை ஆரம்பிப்பதற்கு எடுக்கப்படும் நடவடிக்கை பற்றிய விபரம் ஆகியன திரட்டப்படவுள்ளது.

எனவே, மேற்கூறப்பட்ட பாதிப்புக்களை எதிர்நோக்கியுள்ள தொழில ஸ்தாபனத்தின் தொழில் வழங்குநர்கள் எதிர்வரும் 25 ஆம திகதிக்கு முன்பதாக யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் உள்ள மாவட்ட தொழில் அலுவலகத்தில் விபரங்களைப் பதிவு செய்யுமாறு வேண்டப்படுகிறீர்கள். (ப-9)

## சுனாமி அனர்த்த நிதிசேகரிப்பு விவகாரம்:

# ஜே.வி.பி., ஹெல உறுமய குற்றச்சாட்டை உலகதரிசனம் அமைப்பு மறுத்துள்ளது

(கொழும்பு)

ஆழிப் பேரலைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்காக துடுப்பாட்ட நிதி சேகரிப்பு தொடர்பில் தமது அமைப்பின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை உலக தரிசனம் அமைப்பு மறுத்துள்ளது.

கடந்த திங்கட்கிழமை அவுஸ்திரேலியாவின் மெல்பேர்ன் நகரில் நடத்தப்பட்ட நிதிசேர்க்கும் போட்டியிலிருந்து பெற்ற தொகையை அந்த அமைப்பிடம் ஒப்படைத்ததற்கு ஜே.வி.பி., ஜாதிக ஹெல உறுமய கடும் விமர்சனங்களையும் கண்டனங்களையும் தெரிவித்திருந்தன.

இது தொடர்பாக உலக தரிசனத்தின் இலங்கைத் தீவகத்துக்கான பணிப்பாளர் சூவாலி வெளியிட்டுள்ள கருத்து,

எமது அமைப்பின் மீது இலங்கை அரசாங்கமோ அல்லது பிரதான எதிர்கட்சியோ குற்றச்சாட்டுக்களை சுமத்தவில்லை. சில அரசியல் கட்சிகளே இந்தக் குற்றச்சாட்டுக்களை சுமத்தியுள்ளன. உலக தரிசனம் என்ற அமைப்பு உலகளாவிய ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட அரச சார்பற்ற அமைப்பாகும்.

அத்துடன், மிகவும் உயர்ந்த கணக்காய்வு தன்மை வாய்ந்த அமைப்பாகும். எனவே இந்த அமைப்பின் மீது குற்றம் சுமத்துவது எந்தளவு சாத்தியம் என்பது தெரியவில்லை.

அண்மையில் அவுஸ்திரேலியாவில் இடம்பெற்ற நிதிசேகரிப்பின் போது அதற்கு நிதியுதவி அளித்தவர்கள் அவுஸ்திரேலியாவின் சாதாரண பிரஜைகளாவர்.

எனவே அவர்களுக்கு உலக தரிசனமான தமது அமைப்பு கணககு கூற வேண்டியது அவசியமாகும். இந்த நிலையில் எமது அமைப்பு சர்வதேச அங்கீகாரம் பெற்ற கணக்காய்வு நிறுவனத்தினர் கணக்காய்வுக்கு உட்பட்ட ரீதியில் செயற்படவேண்டிய அவசியம் உருவாகியுள்ளது.

அத்துடன் இலங்கை மக்களுக்கும் எமது அமைப்பு உரிய கணக்குகளைச் சமர்பிக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ப)

## மாகாணக் கல்வி அமைச்சின் ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்குவதற்கு நடவடிக்கை

### புதிய சுற்று நிருபத்தின்படி நிதியும் அனுப்பிவைப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் கடமையாற்றும் அதிபர், ஆசிரியர்கள் மற்றும், வலயக்கல்வி அலுவலகங்களில் பணிபுரியும் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் அதிகரிக்கப்பட்ட சம்பளக் கொடுபபனவுகளை உடனடியாக வழங்குவதற்கு மாகாணக்கல்வித்திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடுகள் வடக்கு-கிழக்கு மாகாணத்தின் 24 வலயக்கல்வி அலுவலகர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக மாகாணக் கல்வித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அரசாங்கத்தின் புதிய சம்பள மாற்று சுற்றுநிருபத்தின் அடிப்படையில் அரசதுறைகளில் கடமையாற்றும் அனைத்து உத்தியோகஸ்தர்களுக்கும் கடந்த டிசம்பர் மாதம் முதலாம் திகதிதொடக்கம் 2 ஆயிரத்து 500 ரூபா சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந்த அதிகரிக்கப்பட்ட சம்பளக் கொடுப்பனவினை வடக்கு கிழக்கு மாகாணத்தின் கல்வித் துறையில் கடமையாற்றும் அனைத்து உத்தியோகஸ்தர்களுக்கும் தற்போது வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. (ப-4)

## மீள் பார்வை

# யாழ்ப்பாணத் தமிழரசர் வரலாறும் காலமும்

38

வேலணை பண்டிதர் பொ.ஜெகந்நாதன்

எனவே கி.பி.948 தொடங்கி கி.பி.1620ஆம் ஆண்டுவரை இவர்கள் ஒருதலைநகரில் வாழ்ந்த ஒரேகுலத்தினர். இவர்கள் நல்லூரில் இருந்ததுண்மைதான் ஆனால் களம்வேறொன்றாயி ருத்தல் கூடாதோ எனின் வேறொரு களம் அறியப்படவில்லையே.

அவ்வரண்மனையில் மேற்குவாசல் கோபுரம் மாத்திரம் இன்னும் அழியாமல் இருக்கிறது. (ஆ.மு.யா.ச பக்.70)

இக்கோபுரத்தை நாம் பன்முறை பார்த்திருந்ததுமன்றி யாம் எழுதிய அடியார்க்கு நல்லார் நூலின் முகப்பட்டையில் பதித்தும் இருக்கிறோம். நல்லூர்க் கோட்டையும் நல்லூர்க் கந்தசுவாமி கோயில் தோற்றமும் ஒரேகாலத்ததாலும், அவை இரண்டும் ஒரே சரித்திர புருடர்களாலே அமைக்கப்பட்டுள்ளனவாதலும் அவை ஒன்றுக் கொன்று எதிர்முகமாக அமைக்கப்பட்டிருக்காதென்று கொள்க. இத்தலைநகர் இருந்த களத்தை உத்தேசமாகக் குறிப்போமானால் மத்தியக் களத்தில் யமுனாரி, சங்கிலியன் தோப்பு, சங்கிலியன் சிலை, முத்திரைச்சந்தை என்பன அமைந்திருக்கின்றன. நல்லூர் வீரமாகாளி அம்மன் கோவிலில் இருந்தும் கைலாயபிள்ளையார் கோவிலில் இருந்தும் கிழக்கே வெயிலுகந்தபிள்ளையார் கோயில் இருந்தும் வடக்கே சட்டநாதர் கோயில் இருந்தும் முத்திரைச்சந்தையில் வந்து முடியும் றோட்டுக்கள் எல்லாம் தலைநகர் இருந்த களத்தின் மேலாலேதான் வருகின்றன.

ஒரு காணிக்கு மக்கள் என்ன பெயரிட்டு வழங்கி வந்தார்களோ அப்பெயரை ஒல்லாந்தர் தங்காலத்தில் பதிந்திருக்கிறார்கள் என்றும், போர்த்தர் பின்னவர் ஒல்லாந்தர் ஆதலால் போர்த்தர் காலத்திலேயும் அவ்வாறு அழைக்கப்பட்டு வந்திருக்கிறது என்றும் போர்த்தர் தான் தமிழரசர் கோட்டையை இடித்தவர்கள். ஆதலால் அவர்கள் இடிக்கும் போதே அக்கோட்டை இருந்த இடம் அதுவென்றும் தேர்ந்து கொள்க.

அப்பால் சிங்கையாரிய குலம் பல கோட்டைகளை வெவ்வேறு இடங்களில் கட்டி ஆட்சி செய்யவில்லை. ஆதிச்சிங்கையாரியன் தொடக்கம் (கி.பி.948 இறுதிச் சங்கிலியன் காலம் கி.பி. 1620 வரை ஒரே தலைநகரிலே ஒரே களத்திலே ஒரே கோட்டையிலே தான் ஆட்சிபுரிந்தார்கள். அந்நகர் தனக்கிருந்த தொடர்பு சம்பந்தமாக நல்லூர் நகரென்றும் சிங்கைநகர் என்றும் யாழ்ப்பாணநகர் என்றும் அழைக்கப்பட்டிருக்கிறது. இவ்வுண்மை முன்னும் பின்னும் காணலாம்.

## 31.நல்லூரும் சிங்கைநகரும்

சிங்கையாரியன் வந்து நல்லூரில் தலைநகரைக் கட்டி அதற்குச் சிங்கை நகர் என்று பெயர்வைத்து அரியாசனம் ஏறி இருக்கின்றான். வந்த இராசகுமாரன் அரசனானபின் பெற்ற பெயர் சிங்கையரியன் அவன் அரசனானதும் சிங்கையாரியன் என்று பிரகடனப்படுத்திக் கொண்டான். கைலாயமாலை அவனைச் சிங்கையாரியன் என்று பாடியது அவன் அரியாசனம் ஏறின பின் பாடப்பட்டபடியால் என்க.

என்னையெனின் அவனுக்குப்பின் அரசாசனம் ஏறிய அவன் மகனுக்குக் குலசேகரசிங்கையாரியன் என்று பெயர். இங்கே குலசேகரன் இடுகுறிப்பெயர். சிங்கை நகர்ப்பெயர், ஆரியர் சாதிப் பெயர் சிங்கையாரியகுல இராசபரம்பரை நல்லூரில் இருந்துதான் தோன்றியிருக்கிறது. இந்நுட்பம் உணராமல் பொலநறுவையை விட்டு எங்கேயோ தொலைவுண்ட கலிங்கமாகன் யாழ்ப்பாணம் வந்தான் என்றும், அவனே வல்லிபுரத்தில் சிங்கைநகரைக் கட்டினான் என்றும் புரைபாடாக மொழிந்தனர் பிறர்.

ஆ.மு.யா.ச.17ம் பக்கத்தில் "இராசகுமாரன்" பாண்டிமழவன் முடி தூக்கிக் கொடுக்க கங்காதர ஐயரால் விதிப்படி மகுடமும் சிங்கை ஆரியச் சக்கரவர்த்தி என்றும், பட்டமும் சூட்டப்பட்டான் என்றுரைத்திருப்பது இவ்வுண்மையை மேலும் நிச்சயப்படுத்துகிறது.

1. வல்லிபுரத்தில் சிங்கைநகர் கட்டிய வரலாறில்லை.
2. வல்லிபுரத்தில் சிங்கையாரியர் யாவரேனும் வாழ்ந்த குறிப்புக்களில்லை.
3. சிங்கை ஆரியர் யாரேனும் வல்லிபுரத்தலைநகரை விட்டு நல்லூருக்கு தலைநகரை மாற்றி அமைத்த செய்தியும் இல்லை.
4. செண்பகப்பெருமாளும் கனகசூரிய சிங்கையாரியனும் வல்லிபுரத்தில் பொருதிய வரலாறுமில்லை.
5. கனகசூரியன் தோற்றோடிய நகரம் ஓர் இடத்தில் இருந்தது. வென்றது வேறோர் இடத்தில் இருந்தது என்றும் சொல்லப்படவில்லை. இங்ஙனம் இல்லாதவைகளை உண்டென்று நிச்சயக்க யா.ச. காரர் யா.வை. விகாரர் ஒரு ஆதாரமும் காட்டவில்லை. அன்றியும் அவர்கள் கருத்துப்படி அவர் சொல்லும் சிங்கை நகரம் 1450 க்கு முறபட்டதானால் (1450-948) 500 ஆண்டு வரை இருந்த அத் தலைநகரம் சிங்கையாரியரின் வாழ்வின் உள்ள ஒரு குறிப்பையுங் கொடுக்காமையோடு துறைகமும் சம்பந்தப்பட்ட ஏதாவதொரு குறிப்புங்கொடுக்கவில்லை.

மேற்படி நூலினர் ஃகைலாயமாலை, வையவமாலைகளால் சொல்லப்பட்ட உண்மைகளை உணர்ந்து கொள்ளாமையாலே அன்றியும் ஒரு பகுதியைப் பிழையாகவும் உணர்ந்து கொண்டமையாலே வல்லிபுரத்திலே அதாவது வல்லிபட்டணமாகிய செங்கடக நகரிலே கி.பி. 1450 க்கு முற்பட்ட நல்லூர் வரலாற்றை எழுதி அதனைச் சிங்கைநகர் வரலாறு என்று பெயர் வைத்துக் கொண்டார். என்க. எனவே செங்கடக நகரைத் தெரியாமல் விட்டார் சிங்கை நகரையும் தெரியாமல் விட்டார் இவ்வுண்மையை மேன்மேலும் காண்போம்.

வல்லிபுரத்திலே சிங்கை நகரைக் கண்டவர்கள் ஆதிச் சிங்கை யாரியன் தொடங்கி இறுதிக் காலத்தில் நல்லூரில் ஆட்சி பண்ணிய பிரபல மன்னான சங்கிலி மன்னன் வரையுமன்றி அவன் பிற்சந்ததியாரராய்ப் போர்த்தர் காலத்தில் சிற்றரசர்களாய் இருந்தாலுங் கூடச் சிங்கையாரிய குல அரசர் தாமென்றும் அறிக.

செண்பகப்பெருமாள் படை எடுத்த இடம் நல்லூரா அல்லது இவர் சொல்லும் வல்லி புரத்திலுள்ள சிங்கை நகரமா அது நல்லூரே.

1. செண்பகப்பெருமாள் தமிழ்ப்படைகளைக் கொன்று இரத்தாறு ஓடச்செய்த இடம் நல்லூர் என்பதாலும் (யா.ச.பக் 310)

2. செண்பகப்பெருமாள் நல்லூரை வென்று ஆட்சிபுரிந்த காலையில் கோகில சந்தேகம் அல்லது குயிற்றூது என்னும் தூது நூலினை பாடியவர் நல்லூரை வெற்றிகொண்டு நானாகீர்த்தி பொருந்த வாழுகின்ற சம்புமால் குமாரேந்திரனுக்கு (செண்பகப்பெருமாளுக்கு) எனப் பாடி இருக்கும் வகையில் அந் நல்லூர் சொல்லப்படுவதாலும் செண்பகப்பெருமாள் படை எடுத்துப் போர் பொருந்திய இடம் நல்லூரே.

3. செண்பகப்பெருமாள் பொருந்தியது கனகசூரியனுடன் என்று சொல்லப்படுவதால் கனகசூரியன் நல்லூரில் ஆட்சிசெய்யும் போது தான் செண்பகப்பெருமாள் அங்குபடை எடுத்தான். (தொடரும்)

# சுவிஸிலிருந்து 20 இலட்சம் பெறுமதியான மருந்துவகை

## மருதங்கேணி கி. வைத்தியசாலைக்கு அன்பளிப்பு



சுனாமி பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களின் வைத்திய உதவிக்காக சுவிற்சர்லாந்து ஆயுள் மெடிக் நிறுவனத்தினரால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட 20 இலட்சம் ரூபா பெறுமதியான மருந்து மற்றும் அத்தியாவசிய மருந்து உபகரணங்களை யாழ். மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு,வடமராட்சி வடக்கு மக்களின் மருத்துவ உதவிக்காக மருதங்கேணி கிராமிய வைத்தியசாலை வைத்திய அதிகாரியிடம் நேற்று முன்தினம் கையளித்தனர்.

இக் கையளிப்பு நிகழ்வின் போது மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர்,சுவிஸ் ஆயுள் மெடிக் நிறுவன இயக்குநகர் ரவீந்திரநாத் புஷ்பராஜா, மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு இணைப்பாளர் ஆகியோர் உடனிருந்தனர். (து)

# புலிகள்- படையினர் அம்பாறையில் பேச்சு

(அம்பாறை)

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும், இராணுவத்தினருக்குமிடையிலான சந்திப்பொன்று கடந்த புதன்கிழமை அம்பாறையில் இடம்பெற்றது.

அம்பாறை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவகத்தில் நடைபெற்ற இச்சந்திப்பில் விடுதலைப்புலிகளின் தரப்பில் அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் குயிலின்பன்,அம்பாறை திட்டமிடல் செயலகப் பொறுப்பாளர் மார்ஷல் உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர்.

படையினர் தரப்பில் அம்பாறை மாவட்ட படை அதிகாரி செனவிரத்ன உள்ளிட்ட குழுவினரும் கலந்துகொண்டனர்.

கடந்த சில நாட்களாக அம்பாறையில் படைத்தரப்பினர் தமிழ் மக்கள் மீதும் கடல் அனர்த்த நிவாரணப் பணியாளர்கள் மீதும் ஏற்படுத்தி வரும் கெடுபிடிகள் தொடர்பாக ஆராயப்பட்டதாக அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் தெரிவித்தார். (ப-4)

# வீசா விண்ணப்பங்களுக்கு சிபார்சு செய்ய யாழ்ப்பாண ஐ.சி.ஆர். சி.குழு மறுப்பு

(யாழ்ப்பாணம்)

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் நிவாரண முயற்சிகளுக்கு தன்னாலான அனைத்து ஒத்துழைப்பினையும் செஞ்சிலுவை இயக்கமானது தொடர்ந்து செய்து வந்த போதிலும் இவ் அனர்த்தத்தால் சொத்துக்கள் உயிர்களுக்கு ஏற்பட்ட இழப்புக்களை உறுதிப்படுத்துவதில் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு எவ்விதத்திலும் சம்பந்தப்படமாட்டாது என செஞ்சிலுவை சர்வதேச குழுவின் யாழ்ப்பா[illegible]ம் தெரிவித்துள்ளது.

குறிப்பாக, செஞ்சிலுவை இயக்கம் பிற நாடுகளுக்கான வீசா வீணணப்பங்களுக்கு தனது ஒத்துழைப்பினை வழங்கும் நிலையில் இல்லை என்பதால், அத்தகைய உறுதிப்பாடுகள் தேவைப்படுமாயின், சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அணுகும்படி செஞ்சிலுவை சர்வதேசக் குழு மக்களுக்கு சிபார்சு செய்கின்றது. (து)

# மலேசிய அமைச்சர் பிரதமருடன் பேச்சு

(கொழும்பு)

'சுனாமி' அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மலேசியா தொழில்நுட்ப ரீதியில் உதவிகளை வழங்க உத்தேசித்துள்ளதாக மலேசிய தொழில் அமைச்சர் செரிஸ் சாமிவேலு தெரிவித்துள்ளார். மலேசியாவின் தொழில் அமைச்சர் சாமிவேலு, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை அலரி மாளிகையில் சந்தித்த போது இதனைத் தெரிவித்தார்.

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்காக 27 மில்லியன் ரூபாவை மலேசிய அமைச்சர் பிரதமரிடம் கையளித்தார்.

இதேவேளை, அயர்லாந்து வெளிவிவகார அமைச்சர் டிமேட் ஏன் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துள்ளார். இலங்கையில் சுனாமியினால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு இலங்கை அயர்லாந்து நம்பிக்கை நிதியம் நிதியுதவி வழங்க எண்ணியுள்ளதாக அயர்லாந்து அமைச்சர் கூறியுள்ளார். (ப-9)

# 500 பட்டதாரிகளுக்கு சுகாதாரத்துறை நியமனம்

(கொழும்பு)

வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலை வழங்கும் திட்டத்தின் கீழ் கடந்த புதன்கிழமை 500 பட்டதாரிகளுக்கு சுகாதாரத் துறையில் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த நியமனம் வழங்கப்பட்ட பட்டதாரிகள் வடக்கு-கிழக்கு உடபட ஏனைய பகுதிகளில் கடமையில் அமர்த்தப்படுவார்கள். சுனாமிப் பேரலையினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சுகாதார சேவைகளுக்கும் இந்த பட்டதாரிகளின் உதவிகள் பெறப்படும். (ப-8)

# இதழியல் மொழி நடை

(தொடர்ச்சி.....)

பத்திரிகைகளைப் படிப்பது மிகவும் குறைவாக இருந்த காலத்தில் சாதாரண மக்களைக் கவருவதற்காக, அந்தச் செய்தியை அவர்கள் படிக்கத் தூண்டும் வகையில் பேச்சுவழக்கல் உள்ள இச்சொற்கள் முன்பு பயன்படுத்தப் பட்டன.

தற்போது பத்திரிகை படிக்கும் வழக்கம் பெருகிவிட்ட சூழ்நிலையில், சாதாரண வாசகர்களுக்குக் கூட இச்சொற்பிரயோகங்கள் பிடிக்காமல் போய்விடும். இவைபோன்ற சொற்கள் பத்திரிகையின் தரத்துக்கு உகந்ததாக இல்லாததால் தற்போதைய பெரும்பாலான பத்திரிகைகள் அவற்றைப் பயன்படுத்துவதில்லை.

'பிறமொழிச் சொல்லைத் தமிழில் மொழிபெயர்க்கும்போது அதை அப்படியே நேரடியாக மொழிபெயர்காமல் அதன் பொருளை மனதில் கொண்டே மொழிபெயர்க்க வேண்டும்' என்பார் ஆதித்தனார்.

***ஆலிங்கனம் செய்து வரவேற்றார்*** என்பதை ***கட்டித்தழுவி வரவேற்றார்*** என்றும், ***பகளாபாத் - தயிர் சோறு*** என்றும் மக்கள் தமிழுக்கு மாற்றிய பெருமை ஆதித்தனாருக்கு உண்டு. அனைத்துப் பத்திரிகைகளுக்கும் ஒரே மாதிரி செய்தி கிடைத்தாலும் அதைத் தன் வாசகர்களின் ரசனைக்கேற்ப 'சுடச்சுட' பரிமாறுவது தினத்தந்தி.

துணை ஆசிரியர்கள் செய்திகளை எப்படி எழுதவேண்டும் என்பதற்குத் தினச்சுடர் பத்திரிகை ஆசிரியர் பா.சு.மணியின் 10 கட்டளைகள் (செய்தி பிறந்த கதை - பா.சு.மணி, ப.6):

'சிறு சிறு வாக்கியங்களாக எழுத்துங்கள் - எளிய சொற்களே இருக்கட்டும். புரிந்த சொற்களில் எழுதுங்கள். தேவையற்ற சொற்களை நீக்குங்கள். வாசகர்களைக் கவரும் வகையில் சொற்களில் துடிப்பு இருக்கவேண்டும். வாசகர்களுடன் நேரில்பேசுவது போல எழுதுங்கள். படம் பார்ப்பது போல உங்கள் எழுத்து இருக்க வேண்டும். வாசகர்களுடன் நெருக்கமாக இருக்கவேண்டும். உங்கள் எழுத்தில் பல ரகம் இருக்கவேண்டும் வாசகர்களுக்கு விளங்குவதாக இருக்கவேண்டும்.

***அபேட்சகர் - வேட்பாளர்; கவர்னர் - ஆளுநர்; ஆஸ்பத்திரி - மருத்துவமனை; அசெம்பிளி - சட்டப்பேரவை; சபாநாயகர் - சட்டப்பேரவைத் தலைவர்; ஜில்லா - மாவட்டம்; காவிரி ஜல தாவா - காவிரி நதி நீர்ப் பிரச்சினை; விஞ்ஞாபனம் - கோரிக்கை; யாதாஸ்து (மகஜர்) - மனு; அக்கிராசனர் - தலைவர்...*** என்று பல்வேறு வார்த்தைகளில் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

ஸ்ரீ, கனம், திரு, அவர்கள் போன்ற அடைமொழிகள் பெயருக்கு முன்பு தற்போது இடம்பெறுவதில்லை. மக்களுக்குப் புரியம் வகையில் தேவைப்படும் இடங்களில் பிரித்து எழுதப்பட்டன (வரவேண்டுமென்று - வரவேண்டும் என்று) அதேபோல சின்ன வாக்கியங்களில் கதைபோல செய்திகளைக் கூறும் மொழிநடையும் வழக்கத்துக்கு வந்துவிட்டது. இதழ்களின் மொழி அமைப்பு, புனைவுகளின் வடிவமைப்பு புதிது புதிதாக உருவாவது காலத்தின் கட்டாயம.

'தாய்மொழிப் பத்திரிகைகளின் உண்மையான தொண்டு, விபத்து, கொலை, கொள்ளை, அடிதடி, காதல், சினிமா, பந்தயம போன்ற ***விறுவிறுப்பு பரபரப்புச்*** செய்திகளையே முக்கியமாகக் கொண்டு, நேரப்போக்குக்கும் வம்பளப்புக்கும் உதவுவது அல்ல. விறுவிறுப்புச் செய்திக்கு இடமிருக்கலாம். ஆனால் அதுவே முக்கியம் என்று ஆகிவிடக்கூடாது' என்பதே ***தினமணி*** போன்ற பத் திரிகைகளின் நிலை.

'இவற்றை மட்டும் அடிப்படையாகக் கொள்ளாமல் பொது விஷயங்கள் பற்றிய அறிவை ஆதாரமாகக்கொண்டால்தான் ஜனநாயகம் சரியானபடி உருவாகும் என்பது என நம்பிக்கை' என்பது தினமணி முன்னாள் ஆசிரியர் ஏ.என். சிவராமனின் கருத்து.

இதற்கேற்ற கருத்துக்களத்தில் செயல்பட்டவர் அவர். பொது விஷயங்கள் பற்றிய நுணுக்கங்களை மக்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும் என விரும்பி, சாமானிய மக்களுக்கு எளிதில் புரியாத பொருளாதாரக் கொள்கைகள், வெளியுறவு விவகாரங்கள், அறிவியல் விஷயங்கள் குறித்து அவர் எழுதினார். அவருடைய கட்டுரைகளில் இடையிடையே ஆங்கிலச் சொற்களும் இருக்கும். அது ஏன் என்பது குறித்து இந்தியாவின் வறுமை பற்றிக் ***கணக்கன்*** ஆராய்ச்சி என்ற நூலில் கூறியிருப்பதாவது:

'கட்டுரையில் இடையிடையே சில ஆங்கிலச் சொற்கள், ஆங்கிலச் சொற்றொடர்கள், ஆங்கில வாக்கியங்கள் இருக்கின்றன. ஆங்கிலம் தெரியாதவர்கள் அதைக் கண்டு பயப்படவேண்டியதில்லை. அந்த ஆங்கிலச் சொற்களை அறவே படிக்காமல் விட்டுவிட்டாலும் ***நஷ்டம்*** எதுவும் இல்லை. ஆங்கிலச் சொற்களை ஒதுக்கியே படித்தாலும் நான் சொல்ல வந்த கருத்து பூரணமாக விளங்கும்.

ஏனென்றால் நான் உபயோகித்துள்ள ஆங்கிலச் சொற்களுக்குச் ***சொல்லுக்குச் சொல்***லாக மொழிபெயர்ப்புத் தராவிட்டாலும் கருத்தை நிச்சயமாக விளக்கியிருப்பேன் என்று வாசகர்கள் சுமாராக (என்னை) நம்பலாம்.

பல இடங்களில் அந்த ஆங்கிலச் சொற்கள் வேண்டியதே இல்லை. ஆனாலும் ஏதோ விசித்திரமான காரணத்தால் ஆங்கிலச் சொற்களையே அதிகம் கையாண்டு பழகியவர்களில் சிலருக்குத் தமிழ் புரிவதில்லை.

ஆங்கிலச் சொல்லையும சேர்த்துப் படித்தால் ஒரு ***புது ஒளி*** கிடைத்தது போன்ற உணர்ச்சி அவர்களுக்கு ஏற்படுகிறது. இது பழக்கம் பற்றிய கோளாறு. அவர்களை நான் குறை கூறவில்லை. இந்தக் ***குறை*** என்னிடம் ஓரளவு இருக்கக்கூடும். இவ்வாறு அங்கிலத்தில் பழகிப்போனவர்களுக்காக ஆங்கிலச் சொற்களை உபயோகித்திருக்கிறேன்'

தமிழ் இதழ்களின் சமூகக கடமையில் தீராத நம்பிக்கை கொண்டிருந்த ஏ.எஸ்.சிவராமன், தனது கருத்துக்களைக் கொண்டு செல்வதற்கான ஊடகமாகப் பத்திரிகையைக் கருதினார். அதனால் எந்தவித மொழிநடையில் சொல்வது என்பதைவிடப் புரிகிற விதத்தில் துல்லியமாகச் சொல்லவேண்டும் என்பதே அவருடைய நோக்காக இருந்தது.

தமிழ் தவிர வேறு மொழி தெரியாத காரணத்தால் அவர்கள கருத்துக்களைத் தெரிந்துகொள்வதில் பின்தங்கிவிடக்கூடாது என்ற எண்ணத்தில் செயல்பட்டவர் அவர்.

தினமணி ஆசிரியராகப் பொறுப்பேற்ற பிறகு அதற்கு ***நவீன முகம்*** கொடுத்த ஐராவதம் மகாதேவன், செய்திகளை எழுதும்போது நல்ல தமிழைப் பயன்படுத்தவேண்டும் என்ற அவசியத்தை வலியுறுத்துவார். சில நேரங்களில் தவறுதலாக ஒரு வார்த்தை பயன்படுத்தப்படும்போது, சரியான சொல் எது என்பதைச் சுட்டிக்காட்டுவார். சில எடுத்துக்காட்டுகள்:

***பஞ்சலோகச்சிலை*** என்று எழுதக்கூடாது. ***செப்புச்சிலைகள்*** என்று எழுதவேண்டும். செப்புச் சிலைகளில் பஞ்சலோகங்கள் இல்லை. மேலும் இவ்வாறு கூறுவதால் ***சிலை*** என்றே எழுதவேண்டும்.

***மனைவி*** என்ற சொல்லுக்குப் பதிலாகத் ***துணைவி*** என்று எழுதவேண்டாம். மனைவி (**wife**), துணைவி (**companion**) என்ற இரு சொற்களும் வெவ்வேறு பொருளைத் தரும்.

***வருஷம், ஆண்டு*** - இரண்டு செரற்களையும் பயன்படுத்தலாம். வருடம் என்று எழுதுவது காதுக்கு இனிமையாக இல்லை.

இதுபோல ***விஷம், விசேஷம்*** என்ற சொற்களை ***நஞ்சு. சிறப்பு*** என்று தமிழ்ப்படுத்தலாம். ஆனால் ***விடம், விசேடம்*** என்று எழுதுவது நன்றாயிராது.

***சமூகமாக*** என்பது சரி. ***சமூகமாக*** என்பது தவறு.

**High level committee** என்பதை ***மேல்நிலைக்குழு*** என்றோ, ***உயர்நிலைக குழு*** என்றோ மொழிபெயர்க்கலாம். ***உயர்மட்டக குழு*** என்று குறிப்பிடுவது தவறு.

***ஷ, ஜ, ஸ, ஹ*** என்ற நான்கு கிரந்த எழுத்துக்களை உரிய இடத்தில் பயன்படுத்தத் தயக்கம் காட்டக்கூடாது. (உ-ம்) ***ஹிந்து, ஹரிஜன், ஹைதராபாத், ஹிமாசலபிரதேசம்.*** ஆனால் சொற்களின் நடுவில் ***ஹ*** என்ற எழுத்தைக் ***க*** என்று எழுதுவது தமிழ் மரபாகும். (உ-ம்) ***மகாராஜா*** (**maharaja**), ***அலகாபாத*** (**Allahabad**).

***ப்ரணவ முகர்ஜி*** என்பது சரியானதே என்றாலும் அப்படி எழுதவேண்டாம். ***பிரணாப் முகர்ஜி*** என்று வங்காளி மொழி மரபிலேயே எழுதவும்.

முன்னாள் குடியரசுத் தலைவரின் பெயரை ***வெங்கட்ராமன்*** என்று எழுதுவது தவறு; ***வெங்கடராமன்*** என்று எழுதுவதுதான் சரி.

***காங்கிரஸ் (இ)*** என்று ஆங்கில மரபில் எழுத வேண்டாம். ***இ. காங்கிரஸ்*** என்று எழுதுவது தான் தமிழ் மரபு. தமிழில் உரிச்சொல் பெயர்ச்சொல்லின் முன்னால் வரவேண்டும்.

***சர்க்காரியா*** என்று எழுதுவது சரி. ***மேகாலய, மேகாலயத்தில்*** என்றும், ***திரிபுரா, திரிபுரா***வில் என்றும், எழுதவேண்டும்.

வக்கீல்கள் கிளர்ச்சியில் சம்பந்தப்பட்டிருந்த தில்லி வடக்கு பொலிஸ் கமிஷனரின் பெயர் திருமதி ***கிரண்பேதி*** (கிரண்பேடி அல்ல).

செய்திகளில், ***அலறித் துடித்தார், துடித்து இறந்தார், ரத்த வெள்ளத்தில் மிதந்தார்*** என்பன போன்ற சொற்கள் வரக்கூடாது.

***கழகம*** என்ற சொல்லைத் தமிழ்நாடு அரசு நிறுவனங்களுக்கு மட்டுமே பயன்படுத்தவேண்டும். (உ-ம்) பல்லவன் போக்குவரத்துக் கழகம்.

மற்றபடி ***கம்பெனி, கார்ப்பொரேஷன், இன்ஸ்டிடியூட்*** போன்ற ஆங்கிலச் சொற்களுக்கு ***நிறுவனம்*** என்ற சொல்லைப் பயன்படுத்தலாம். (உ-ம்) **Life Insurance Corporation** என்பதை ***ஆயுள காப்பீட்டு நிறுவகம்*** என்று மொழிபெயர்க்கலாம். மேலும் ***நிலையம், ஸ்தாபனம், மையம்*** போன்ற தமிழ்ச சொற்களை இடமறிந்து பயன்படுத்தலாம். **Company, Corporation** என்ற ஆங்கிலச் சொற்களை அப்படியே ஒலிபெயர்த்து எழுதினாலும் தவறில்லை.

உயிரெழுத்துகளில் தொடங்கும் சொற்களின் முன்னால் ***ஓர்*** என்றும், மெய்யெழுத்துக்களில் தொடங்கும் சொற்களுக்கு முன்னால் ***ஒரு*** என்றும் எழுதவேண்டும் (ஓர் ஊர், ஒரு கிராமம்).

தலைப்புகள் இரு வரிகளில் வருமாயின் முதல் வரியின் முடிவில் ஒற்றுத் தேவையில்லை. இவைபோன்ற நடைமுறைகள் மூலம் ***தினமணி***க்கு நல்ல தமிழ்மூலம் நவீன முகம்கொடுக்க முயன்றார் மகாதேவன்.

'வகுப்புவாதிகள், மதவெறியர்கள், பிற்போக்குக் கும்பல்கள், குழப்பங்கள் உண்டுபண்ணுகிறவர்க்ள், நாட்டைக் காட்டிக் கொடுக்கும் நயவஞ்சகர்கள், தமிழினத்திற்குத் துரோகம் செய்யும் கோடாலிக்காம்புகள், இத்யாதி கோஷ்டிகள் அத்தனைபேரும் எமது விரோதிகள். இவர்களை முறியடிப்பதில் தினமலர், முன்னிலையில் நின்று பணியாற்றிவரும்.....' என்ற முழக்கத்துடன் (தினமலர் முதல் தலையங்கம் - 07-09-1951) வெளியானது ***தினமலர்.***

***தினமணிக்கும், தினத்தந்திக்கும்*** இடைப்பட்ட வாசகர் கூட்டத்தை ஈர்க்கும்வகையில் தொடக்கத்தில் செயல்படத் தொடங்கினாலும்கூட, தனக்கென ***தனிப் பாணி*** உருவாக்கித் தமிழகத்தில் தனக்கென தனித்த ஓர் இடத்தைப் பிடித்துக்கொண்டது.

கார் போகாத பட்டிதொட்டிகளையும், ஒற்றைப் பாதையோர குக்கிராமங்களையும் தேடிப்பிடித்து அதுகுறித்து படங்களுடன் செய்திகளை வெளியிட்டது. இதன்மூலம் அச்செய்திகள் அரசின் கவனத்தையும் மக்களின் கவனத்தையும் ஒருசேர ஈர்க்கமுயன்றது.

இதனால அந்தந்தப் பகுதிகளில் புதிய வாசகர் வட்டத்தைக் கவர்ந்தது. அதற்கேற்றபடி தனத்கெனத் தனிமொழிநடையை ஏற்படுத்திக்கொண்டது. மற்றப் பத்திரிகைகளிலிருந்து வித்தியாசமான தலைப்புகளைத் தேர்ந்தெடுத்துத் துடிப்பான வார்தைகளில் ***நறுக்கெனக்*** கொடுப்பது ***தினமலர்*** பாணி.

திரைப்படப பாடல்வரிகள, 'நையாண்டி' தலைப்புகள், ஆங்கிலக் கிண்டல் வாசகங்கள்... இப்படி ஏதாவது ஒன்றைச் செய்து தினமலர் முத்திரையைச் செய்திகளில் பதிக்கத் தவறுவதில்லை. இந்தச் செய்தியை இப்படித்தான் எழுத வேண்டும்; இந்த நடையில் 'இந்த மாதிரி இருக்கவேண்டும்' என்ற இலககண வரம்புக்குள் தினமலர் சிக்கிக்கொள்ளவில்லை.

இதேபோல ஒவ்வொரு இதழ்களுக்கும் தனிப்பண்புகள் இருக்கின்ற அதேநேரத்தில் பொதுப பண்புகளும் பல உண்டு என்பதையும் கவனிக்கவேண்டும். ஓர் இதழில் ஏற்படும் மாற்றத்தின் தாக்கம், மற்ற இதழ்களுக்கும் விரைவில் தொற்றிக்கொண்டுவிடுகிறது.

பத்திரிகையுலகில் ஒவ்வொரு இதழாசிரியர்களும் தனக்கெனத் தனிநடையை உருவாக்கி வாசகர்கள் மனதில் இடம்பிடித்துள்ளார்கள். அரசியல் பணிக்கு இதழ்களையும் ஒரு கருவியாகப் பயன்படுத்திய பெரியாரின் இதழியல் திறமைக்கு ஓர் எடுத்துக்காட்டு:

ஒரேநாளில் திருப்பூருக்கு மூன்று அமைச்சர்கள் வருகைதந்த செய்திக்கு 14-8-1927 ***குடியரசு*** இதழில் அவர் கொடுத்த தலைப்பு

**'திருப்பூர் மார்க்கெட்டு நிலவரம்**
**மந்திரிகள் சவுதம்**
**புஷ்பம் கிராக்கி'**

***சவுதம்*** என்றால் ***மலிவு.***

'கழகம் நல்லபடி இயங்க வேண்டுமானால் பிரசாரமும் பத்திரிகையும் மிக அவசியம் ஆகும்' (விடுதலை 10-80-1962) என்று கருதிய பெரியார், துணிச்சலான கருத்துக்களை மக்களுக்குச் சுரணை ஏற்படுத்தும் நடையில் தந்தார்.

தனித்துவமிக்க நடையால் தமிழ் மொழிநடை வரலாற்றில் என்றைக்கும் நினைவு கூரத்தக்கவர் குத்தூசி குருசாமி. ***பலசரக்கு மூட்டை*** என்ற தலைப்பில் எழுதிய சமூக, அரசியல் கட்டுரைகளில் உள்ள ***நையாண்டியை*** இன்றைக்கும் ரசித்து மகிழ முடியும். அதற்கேற்ற துள்ளல் நடையை அவர் கையாண்டார்.

'பொங்கவேண்டியது எது? அறிவுப்பாதை - 15-01-1964) என்ற தலைப்பில் அந்த இதழாளரின் கோபாவேசம் நகைச்சுவை வடிவில் சமூக விமர்சனமாக வெளிப்படுகிறது. அக்கட்டுரையின் ஒரு பகுதி:

....அரிசியைப் பொங்கிச் சாப்பிடு என்ற இந்தப் புதிய கருத்துப் பற்றித் தொல்காப்பியம் என்ன கூறுகிறது? வேதம் என்ன சொல்கிறது? கம்பர் எங்காவது இதுபற்றிக் குறிப்பிடுகிறாரா? கீதையில் பகவான் கிருஷ்ணன் ***பொங்கல் சோறு*** பற்றி ஏதாவது ஜாடை காட்டியுள்ளாரா?

பொன்.தனசேகரன்

மனுதர்ம சாஸ்திரத்தில் ஏதாவது பொங்கல் வாசனை தெரிகிறதா?

இப்படியெல்லாம் ஆராய்ந்து பார்க்காதபடி அவசரக்குடுக்கையாக நடக்கமாட்டான். நம் தமிழன்.

சரி, 'இந்த நாளுக்கு மட்டும் ***பொங்கல்*** என்று ஏன் பெயரிட்டிருக்கிறார்கள்? இதிலிருந்தே தமிழன் மீதி நாட்களில் கஞ்சி வடித்த சக்கையைத்தான்மென்று கொண்டிருக்கிறான் என்பது விளங்கவில்லையா?' என்று தமிழ்ப் புலவர் திருவாளர் ஆராய்ச்சி மணியவர்கள் கேட்பது உங்களது காதில் விழுகிறதா?

எனவே, இன்று தமிழனுக்கு அவசரமாகப் பொங்க வேண்டியது அரிசி கூட அல்ல!

அறிவு பொங்கவேண்டும்! துணிவு பொங்கவேண்டும்! அவசரம் (நல்ல கரியத்துக்கு) பொங்க வேண்டும்! குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் செக்குமாட்டுக் குணத்தின் மீது எதிர்ப்புணர்ச்சி பொங்கவேண்டும்!

பொங்குக இத்தனையும் உடனடியாக! என்று வாழ்த்துக் கூறுகிறேன்' குத்தூசி குருசாமியைப்போல தனித்துவமிக்க மொழிநடையால் தமிழுக்கு அரிய பங்களிப்பைச் செய்த இதழாளர்கள் பலர் உள்ளனர்.

குறுகிய கால இடைவெளியில் பெரும்பாலும் ஆங்கிலத்தில வரும் செய்திகளைத் தமிழில் தர வேண்டிய சூழ்நிலையில் பல நேரங்களில் தகுந்த வார்த்தைகளைக் கண்டுபிடிப்பது என்பது கடினமான காரியம். இது அன்றிலிருந்து இன்றுவரை இருந்துவரும் பிரச்சினை.

இந்தியாவில் விதவைகளின் பரிதாபகரமான நிலைமையைப் பற்றி, காந்திஜியின் கருத்தை விமர்சனம் செய்யும்போது பாரதி கூறுகிறார்:

'ஸ்திரீ - விதவைகளின் தொகையைக் குறைக்க வழிகேட்டால் ஸ்ரீமான் காந்தி 'புருஷ விதவைகளின் (அதாவது புனர் விவாகமின்றி வருந்தும் ஆண் மக்களின்) தொகையை அதிகப்படுத்த வேண்டுகிறார்...' மனைவியை இழந்த ஆண்களுக்குப் ***புருஷ - விதவை*** என்ற வார்த்தையைத் தேடிப்பிடித்துப் பயன்படுத்துகிறார்.

(தொடரும்)

# சிறுவர் அரங்கம்





## கும்பிடுவோம்



கடவுளை அம்மா கும்பிடவே
நானும் கடவுளைக் கும்பிட்டேன்
கடவுள் எங்கே என்றிடவே
சூரியனைக் காட்டி நின்றாரே
ஒளியைத் தருவது சூரியனே
மழையைத் தருவதும் சூரியனே
உணவைத் தருவதும் சூரியனே
எம்மை வளர்ப்பதும் சூரியனே
அனைத்தும் சூரியன் தருவதனால்
அனைவரும் வணங்கிக் கொள்வோமே.


*செம்பியன் செல்வி*

## விண்கலச் செய்திகள்

- ரஷ்யாவில் 1949ஆம் ஆண்டு முதன்முதலில் ஆள் இல்லா விண்கலம் செலுத்தப்பட்டது.
- அதைத்தொடர்ந்து 1957இல் ரஷ்யா 'ஸ்புட்னிக்' என்ற விண்கலத்தை அனுப்பியது.
- 1975இல் 'ஆரியபட்டா' என்ற செயற்கைக்கோளை இந்தியா முதன்முதலில் அனுப்பியது.
- 1969ஆம் ஆண்டு ஜ"லை 16ஆம் திகதி அமெரிககாவின் நாசா விண்வெளி ஆய்வு நிலையத்தில் 'அப்பல்லோ II'என்ற விண்கலம் நிலவை நோக்கிப் பயணத்தைத் தொடங்கியது.
- நான்கு நாள் பயணத்துக்குப் பின்பு ஜ"லை 20ஆம் திகதி நிலவில் விண்கலம் இறங்கியது.

லோ. கர்த்திகா, உடுப்பிட்டி.

## உலக அதிசயங்கள்



பண்டைய உலக அதிசயங்கள்

*எகிப்தின் பிரமிட்டுகள்.
*எ∴பிஸ்ஸில் இருந்த ஆர்ட்டிமிஸ் ஆலயம்.
*ஹேலி கார்னஸிஸ்ஸில் இருந்த கல்லறை மாடம்.
*அலெக்ஸாந்தியாவிலருந்த ∴பாரோஸ் கலங்கரை விளக்கம்.
*பாபிலோனியாவின் தொங்கும் தோட்டம்.
*ஒலிம்பஸ்ஸிலிருந்த ஜியூஸ் சிலை.
*ரோர்ஸில் இருந்த் பேருருவச் சிலை (கொலஸஸ்).

## இரண்டு கூனல் ஒட்டகம்



'பாக்ட்ரீயன் ஒட்டகம்' என்று அழைக்கப்படும் ஒட்டகம் மத்திய ஆசியாவைச் சேர்ந்தது. தற்போது துருக்கஸ்தான் என்று அழைக்கப்படும் பகுதிதான் முன்னர் பாக்டரீயன் என்று அழைத்தனர். அதனால்தான் ஒட்டகத்திற்கு பாக்ட்ாயன் ஒட்டகம் என்ற பெயர் வந்தது. அரேபிய ஒட்டகத்தோடு பாக்ட்ரீயன் ஒட்டகத்தை ஒப்பிடும்போது பாக்ட்ரீயன் ஒட்டகம் தன் முதுகில் இரண்டு பெரிய கூனல்களைக் கொண்டுள்ளது. மேலும் அடர்த்தியான, நீளமான முடிகளைக் கொண்டுள்ளது. அரேபிய ஒட்டகத்தின் கால்களை விட பாக்ட்ரீயன் ஒட்டகத்தின் கால்கள் தடிமனாகவும், சிறியவையாகவும் காணப்படுகிறது.

இதனுடைய சிறிய மற்றும் தடிமனான பாதத்தின் துணையால் வறண்ட மற்றும் மலைப் பிரதேசங்களில் வாழும் தன்மையைப் பெற்றுள்ளது. பாக்ட்ரீயன் ஒட்டகம் 250 கிலோ எடையைச் சுமக்கும் சக்தி கொண்டவை. மேலும் ஒருமணி நேரத்திற்கு நான்கு கிலோ மீற்றா் என்றளவில் பல நாட்கள் நடக்கக்கூடியவை. பாலூட்டி இனங்களிலேயே பாக்ட்ரீயன் ஒட்டகம் அழிந்துவரும் ஒட்டகப்பட்டியலில் உள்ளது.

## பெயரில் என்ன இருக்கிறது?

ஓர் ஊரில் மண்ணாங்கட்டி என்றோர் விவசாயி இருந்தான். அவன் தாய் தநதையருக்கு நிறையக் குழந்தைகள் பிறந்தன. ஒன்றுகூட நிலைக்கவில்லை. கடைசியில ஒரு குழந்தை பிறந்தது.

'செல்லப் பெயர்களாக வைப்பதால் தானே எல்லாக் குழந்தைகளும் இறந்து விடுகின்றன. இந்தக் குழந்தைக்கு மண்ணாங்கட்டி என்று பெயர் வைப்போம். இதாவது நிலைத்து இருக்கிறதா என்று பார்ப்போம்' என்ற எண்ணத்துடன் கடைசியாகப் பிறந்த குழந்தைக்கு அதன் பெற்ஜோர்கள் மண்ணாங்கட்டி என்று பெயர் வைத்தனர்.

மண்ணாங்கட்டியும் நீண்ட ஆயுளைப் பெற்று நல்லபடியாக வளர்ந்து வந்தான். மண்ணாங்கட்டி பெரியவனாகிவிட்டான். ஊரில் உள்ள அனைவரும் அவனை 'மண்ணாங்கட்டி மண்ணாங்கட்டி' என்று கூப்பிடுவது அவனுக்கு வேதனையாக இருந்தது.

'உலகத்தில் எவ்வளவோ நல்ல பெயர்கள் இருக்க நமக்கு மண்ணாங்கட்டி என்று நம் பெற்றோர் பெயர் இட்டனரே! இதனால் அல்லவா நாம் எல்லோருடைய கேலிக்கும் ஆளாகவேண்டியிருக்கிறது' என்று நினைத்த மண்ணாங்கட்டி எப்படியாவது தன் பெயரை மாற்றி வேறு நல்ல பெயராக வைத்துக்கொள்ளவேண்டும் என்று தீர்மானித்தான்.

அவ்வூருக்குப் புதிதாகச் சாமியார் ஒருவர் வந்திருந்தார். ஊர்கோடியில் இருந்த ஆலமரத்தடியல் அமர்ந்திருந்தார்.

ஊர்மக்கள் அனைவரும் சென்று சாமியாரைப் பார்த்துத் தங்கள் குறைகளை அவரிடம் கூறினர். சாமியாரும அவர்கள் குறை தீர்வதற்காக இறைவனிடம் வழிபாடு செய்து கொண்டார்.

மண்ணாங்கட்டியும் ஒருநாள் சாமியாரிடம் சென்றான்.

மண்ணாங்கட்டியைப் பார்த்த சாமியார், ''மகனே, உன் குறை என்ன?'' என்று அன்புடன் கேட்டார்.

''சுவாமி! என் பெற்றோர் எனக்கு மண்ணாங்கட்டி என்று பெயரிட்டுவிட்டனர். அது அப்படியே நிலைத்துவிட்டது. எல்லோரும் என்னை, மண்ணாங்கட்டி, மண்ணாங்கட்டி என்றே கூப்பிடுகின்றனர். இதனால் எனக்கு அவமானமாக இருக்கிறது. தாங்கள்தான் எனக்கு வேறு ஒரு நல்ல பெயராக வைக்க வேண்டும்'' என்றான் மண்ணாங்கட்டி.

''மகனே, நானாக உனக்கு ஒரு பெயர் வைப்பதைவிட நீயே ஒரு நல்ல பெயரைத் தேர்ந்தெடுத்துக்கொண்டு என்னிடம் வா. அந்தப் பெயரையே உனக்குச் சூட்டி ஆசீர்வாதம் செய்கிறேன்'' என்று மண்ணாங்கட்டியிடம் கூறினார் சாமியார்.

மண்ணாங்கட்டி கடைத்தெருவுக்குச் சென்றான். அங்கு ஒரு கடைக்காரர் தம்மிடம் பிச்சை கேட்க வந்த ஒரு பிச்சைக்காரனிடம் எரிந்து விழுந்து கொண்டிருந்தார்.

''உங்களுக்கெல்லாம் வேறு வேலை இல்லையா? கடாமாடு மாதிரி இருந்து கொண்டு பிச்சையெடுக்க வந்துவிட்டாயே! போ... போ'' என்று பிச்சைக்காரனை அடிக்காத குறையாக விரட்டினார் கடைக்காரர்.

பிச்சைக்காரனைக் கடைக்காரர் விரட்டுவதைப் பார்த்த வழிப்போக்கர் ஒருவர், 'பேர்தான் தருமராசன்! பிச்சைக்காரர்களுக்கு ஒரு பைசா கொடுக்க மனம் வராது' என்று கடைக்காரனைத் திட்டியபடியே சென்று கொண்டிருந்தார்.

எதிரே ஒரு குருட்டுப் பிச்சைக்காரன் மண்ணாங்கட்டியிடம், ''சாமி இரண்டு கண்களும் தெரியாதவன். தருமம் செய்யுங்கள்'' என்றபடியே தகரக் குவளையை அவன்முன் நீட்டினான்.


மண்ணாங்கட்டி பிச்சைக்காரனின் தகரக் குவளையில் பத்துக்காசு நாணயத்தைப் போட்டுவிட்டு,

''உன் பெயர் என்ன?'' என்று பிச்சைக்காரனைப் பார்த்துக் கேட்டான்.

"என் பெயர் கண்ணாயிரம்!" என்றான் பிச்சைக்காரன்.

'அடப் பாவமே, பெயர் கண்ணாயிரம்! இரண்டு கண்ணும் இல்லையே!' என்று நினைத்தவாறே மேற்கொண்டு நடந்துகொண்டிருந்தான் மண்ணாங்கட்டி.

எதிரே ஒரு பிணத்தை நான்குபேர் தூக்கிக்கொண்டு சென்றுகொண்டிருந்தனர். மண்ணாங்கட்டி "இறந்துபோனவர்



யார்?"என்று எதிரே வந்தவரிடம் கேட்டான்.

"இவரைத் தெரியாதா உனக்கு? இவர்தான் சிரஞ்சீவி" என்றான் எதிரே வந்தவன்.

"சிரஞ்சீவி என்று பெயர் வைத்துக் கொண்டவர்கள் கூட இறந்துவிடுவார்களா?" என்று வியப்புடன் எதிரே வந்தவனைப் பார்த்துக்கேட்டான் மண்ணாங்கட்டி.

"பைத்தியக்காரா, பெயரில் என்ன இருக்கிறது. அழகேசன் என்று பெயர் இருக்கும். பார்த்தால் அவலட்சணமாக இருப்பான். லட்சுமி என்று பெயர் இருக்கும். அவள் பிச்சை எடுத்துக்கொண்டிருப்பாள். இதெல்லாம் சகஜம்" என்று கூறிவிட்டுச் சென்றான் எதிரே வந்தவன்.

பிறகு மண்ணாங்கட்டி நேரே சாமியாரிடம் சென்றான்.

"மகனே! நல்ல பெயராக ஒரு பெயரைத் தேர்ந்தெடுத்துக்கொண்டு வந்துவிட்டாயா?" என்று மண்ணாங்கட்டியைப் பார்த்துக்கேட்டார் சாமியார்.

"சுவாமி, நிறையப் பெயர்கள் கிடைத்தன. ஆனால், ஒரு பெயர்கூட எனக்குப் பிடிக்கவில்லை. பெயருக்கும் குணத்திற்கும் கொஞ்சம்கூட சம்பந்தமில்லாமல் இருக்கிறார்கள்?'' என்றான் மண்ணாங்கட்டி.

"மகனே, இதனை நீ தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் நான் அவ்வாறு கூறினேன். செய்கிற செயல் நல்லதாக இருந்தால் பெயரை ஒருவரும் பொருட்படுத்தமாட்டார்கள். குணம் கெட்டதாக இருந்தால் எவ்வளவு நல்ல பெயராக வைத்திருந்தாலும் மக்கள் அவர்களைத் திட்டத்தான் செய்வார்கள். ஆகையினால் பெயரைப் பொருட்படுத்தாதே குணத்தில் சிறந்தவனாக விளங்கு – மக்கள் உன்னைப் புகழ்வார்கள்" என்றார் சாமியார்.

## சிந்திக்க இருவரிகள்

❄குறைகள் அற்றோர் இந்தக் குவலயத்தில் யாருமுண்டோ
நிறைவுகளை ஒருகணம் நீ நோக்கு

❄என்னருமை மாணவனே! வகுப்பறையில் நீ தூங்கின்
உன்னரிய எதிர்காலங் கெடும்.

❄தவறினை உணர்நதும் திருந்தாதான் வாழககை
அவமாகும் அவனி தனில்.

*அன்னைதாஸன்.*

# அமெரிக்காவின் அனுபவப் பகிர்வு

நில நடுக்கம் வருவதாக உணாந்தாலும், நில நடுக்கமே வந்து விட்டாலும் சுனாமி எச்சரிக்கைக்கு காத்திராமல் பாதுகாப்பான இடங்களுக்குச் சென்று விடவேண்டியது அவசியம் என்கிறது அமெரிக்காவின் சுனாமி எச்சரிக்கை முறை (டீ.டபிள்யு,. எஸ்.)

நில நடுக்கத்தால் அடிக்கடி பாதிக்கப்பட்டு அனுபவங்களை பெற்ற அமெரிக்காவின் புவியிலாளர்கள் இது குறித்து தெரிவித்துள்ள விவரம் இதோ,

நில நடுக்கம் குறித்த வரலாற்றை புரட்டிப் பார்த்தால் கடந்த 1811-1812ஆம் ஆண்டுகளில் அமெரிக்காவில் உள்ள அல்பாமாவில் 3மிகப் பெரிய நில நடுக்கங்கள் ஏற்பட்டு அல்பாமாவின் வடக்கு மற்றும் மத்திய பகுதிகளைக் கடுமையாக பாதித்தது. இது 8ரிக்டர் அளவு

**சுனாமி**
**இணையப் பார்வை**

இருந்ததால் அது 7ஆவது பிரிவாக கணக்கிடப்பட்டது. இது போல் அல்பாமா அடிக்கடி நில நடுக்கததை சந்தித்து வந்துள்ளது. இவற்றால் ஏற்பட்ட பாதிப்புகளை கணக்கிட்டு நில நடுக்கத்தின் கடுமை மற்றும் தீவிரத்தை வைத்து 7பிரிவுகளாக பிரிக்கப்பட்டது. அதிக அளவு பாதிப்பை ஏற்படுத்தினால் அது 7 ஆவது பிரிவு என்று வகுத்தனா்.

அதேபோல ஒன்று முதல் தொடங்கி 7வரையில் நில நடுக்கத்தின் கடுமை மற்றும் தீவிரத்தை அமெரிக்க புவியியலாளர்கள் வகுத்து வைத்துள்ளனர். இதுபோன்ற கடுமையான 7ஆம் நிலை நில நடுக்கத்தை நாம் 1906இல் சான் பிரான்சிஸ்கோவில் நிகழ்ந்த நில நடுக்கத்துடன் ஒப்பிட முடியும். இந்த நில நடுகத்தின் போது 20இலட்சம் சதுர மைல்கள் அமெரிக்காவில் பாதிக்கப்பட்டது. இது மிகப் பெரிய பாதிப்பாக அப்போது கருதப்பட்டது.

7ஆம் நிலை நில நடுக்கம் 1916ஆம் ஆண்டில் பரிங்ஹாம் பகுதியில் ஏற்பட்ட போது கட்டடங்கள் பயங்கரமாக குலுங்கின. அதில் ஒரு இலட்சம் சதுர மைல் அளவில் பாதிப்பு ஏற்பட்டது. இதற்கு பிறகு 1957, 1959 ஆகிய ஆண்டுகளில் 7ஆம் நிலை



நில நடுக்கங்கள் அமெரிக்காவின் பல பகுதிகளில் ஏற்ட்டு அந்த நாட்டையே கதிகலங்க வைத்துள்ளன. இது தவிர குறைந்த அளவில் பாதிப்புகளை ஏற்படுத்தும் 5ஆம் நிலை நில நடுக்கங்கள் (4.9 ரிக்டர்) அல்பாமாவின் மேற்கு பகுதியில் ஏற்பட்டது. 1927, 1931, 1939ஆம் ஆண்டுகளில் ஏற்பட்டது என்றாலும் அவற்றால் பெரிய பாதிப்புகள் ஏதும் இல்லை. 1968இல் அல்பாமாவின் தெற்கு பகுதியில் ஏற்பட்ட நில நடுக்கத்தின் கடுமை மற்றும் தீவிரத்தை வைத்து 5ஆம் நிலையாக கணக்கிட்டனா். அதேபோல 6ஆம் நிலை கடுமை கொண்ட நில நடுக்கங்கள் 1975,1989, 1997,1999 ஆகிய ஆண்டுகளில் ஏற்பட்டன. இந்த நில நடுக்கங்கள் 3.9ரிகடரில் இருந்து 7ரிக்டர் வரையில் இருந்தன. இப்படி நில நடக்கத்தால் தரைப் பகுதியில மட்டும் அதிக அளவில் பாதிப்புகளை அலபாமா சந்தித்து வந்துள்ளது. தரைப் பகுதில் மட்டும் தான் பாதிப்பு என்று இல்லாமல் கடலில் உருவாகும் நில நடுக்கத்தால் சுனாமி பாதிப்புகளும் அமெரிக்காவை விட்டு வைக்கவில்லை.

சுனாமி மட்டும் அமெரிக்காவை அவ்வளவு சாதாரணமாக வீட்டு விடவில்லை. கடந்த 204ஆண்டுகளில் 24முறை அமெரிக்கா மற்றும் அதை சோந்த பெரிய பிரதேசங்களையும் சுனாமி சீரழித்துள்ளது. 1946இல் ஹவாய், அலாஸ்கா மற்றும் அதன் மேற்கு கரையோரங்களில் உள்ள பிரதேசங்களில் 6முறை சுனாமி அலைகள் தாக்கி 350பேரை பலி கொண்டது. இதற்கு பிறகு 1992ல் ஒரு முறை கலிபோர்னியாப் பகுதியில் ஏற்படட ஒரு நில நடுக்கம் மிகப் பெரிய சுனாமி உருவாக காரணமாக இருந்தது.

கலிபோர்னியாவில உருவான சுனாமி 20நிமிடத்தில் யுரேகாவை தாக்கியது. 50நிமிட நேரத்தில் கிரசென்ட் சிட்டியை தாக்கியது. 1957இல் அலாஸ்காவில் உள்ள அலுட்டியன் தீவில் ஏற்பட்ட நில நடுக்கத்தின் காரணமாக பயங்கர சுனாமி உருவானது. இது 2ஆயிரத்து 100மைல்கள் கடந்து ஹவாய் தீவை தாக்கியது. இந்த தாக்குதலில் 5 மில்லியன டொலர் சேதம் ஏற்பட்டது.

நில நடுக்கம் மற்றும் கடலில் உருவாகும் சுனாமி என இரு வகையான தாக்குதல்களை அடிக்கடி சந்திதது வந்த அமெரிக்காவில் இப்போது இந்த இரு வகையான தாக்குதல்களின் பாதிப்புகள் குறித்து அமெரிக்க மக்கள் ஓரளவு தெிந்து வைத்துக் கொண்டனா். இதற்குக் காரணம் அடிக்கடி ஏ்றபட்ட பாதிபால் விளைந்த அனுபவம், மற்றொரு புறம் அந்த நாடு இதுபோன்ற இயற்கை சீற்றங்கள் குறித்து முன்கூட்டியே தெரிந்துகொள்ள ஏற்படுத்தியுள்ள புத்திசாலித்தனமான ஏற்பாடுகள்தான் பொதுமக்களை பேரழிவில் இருந்து காத்து வருகிறது.

அடிக்கடி நில நடு்கத்தை சந்தித்து வந்த அமெரிக்கர்கள் பேரழிவில் இருந்து தங்களை் பாதுகாத்துக்கொள்ள புதிய கருவிகளையும் கண்டு பிடிக்கத் தொடாங்கினர். அத்துடன் நில நடுக்கம் மற்றும் சுனாமி ஆகியவை ஏற்படுவது குறித்து முன் கூட்டியே தெரிவிக்கும் வகையில் 26நாடுகளைக் கொண்ட சுனாமி எச்சரிப்பு முறையை பசுபிக் பகுதியில் அமெரிக்கா ஏற்படுத்தியுள்ளது. இந்த முறையின் மூலம் 26நாடுகளை சேர்ந்தவர்களுககும் அவர்கள் தெரிவிப்பது எல்லாம் இது தான். எப்போது நீங்கள் கடுமையான நில நடுக்கம் வரப்போவதாக உணருகிறீர்களோ அப்போதே நீங்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் சென்று விடவேண்டும். சுனாமி எச்சரிக்கை வரும் வரையில் காத்திருகக்கூடாது என்பது தான் அப்படி என்றால் நில நடுக்கம் வரும்முன்னே! சுனாமி வரும்பின்னே!

# யார் பாவி...?

சுனாமி அனா்த்த அழிவுகளையும் வழக்கம் போல பழைமை வாதிகளும் மதவாதிகளும் பழியை அப்பாவியான கடவுள மீது போட்டுவிட்டார்கள். தமிழ் நாடு முதல்வர் ஜெயலலிதா



பாதிக்கப்பட்ட மக்களைச் சந்திதது சுனாமியால் ஏற்பட்ட அழிவுகள் 'கடவுள் சித்தம்' என்று சொல்லியிருக்கிறார்.

பதைக்கப் பதைக்க இரண்டு இலட்சம மக்களைக் கொன்று குவித்த சுனாமி கடவுள் சித்தத்தால் ஏற்பட்டது என்பது அந்தக் கடவுளைக் கருணையற்ற ஒரு பாவியாக சித்தரிக்கும் முயற்சியாகும். ஜெயலலிதா சொல்வது உண்மை என்றால் அவர் குறிப்பிடும் கடவுள் கடவுளாகவே இருக்க முடியாது! திரைப்பட நடிகர் ரஜனிகாந் 'உலகில் பாவிகள் அதிகரித்ததால் இந்த அனர்த்தம் ஏற்பட்டது' என்று தத்துவம் பேசியுள்ளார். அவரை மன்னிக்கலாம். அந்தப் பாவிகளில் அவரும் ஒருவரா இல்லையா என்பதை அவர் சொல்லவில்லை. சங்கர மடத்தை சேர்ந்த காவி ஒன்று 'மடத்துக்கு களங்கம் கற்பித்ததைப் பொறுக்காத ஆண்டவன இந்த அனர்த்தத்தை ஏற்படுத்தி மக்களைத் தண்டித்துள்ளான் எனப் பேசியிருக்கிறது.

சங்கராச்சாரியாரை தீபாவளி நாளனறு கைது செய்தது ஜெயலலிதா. அவரல்லவா கடவுளின் தண்டனைக்கு ஆளாகி இருக்க வேணடும்? மாறாக ஒன்றும் அறியாத அப்பாவி மக்கள் ஏன் தண்டிக்கப்பட வேண்டும்? இப்படி சுனாமி விளைவித்த அழிவுக்கு ஒவ்வொருவரும் மனம்போன போக்கில் காரணம் கற்பிக்கிறார்கள். சிறையில் வாடும் ஜெயேந்தர் 'சின்ன பெரியவாள் சிறைக்கு வந்து விட்டால் சந்திரமௌலீஸ்வரர் பூசை நின்று போய்விடும. நியமப்படி அது நடக்காமல் போனால், இப்போ சந்தித்திருப்பதை விட மிகப்பெரிய இயற்கை அழிவை நம் தேசம் சந்திக்க நேரிடும்' என்கிறார். சந்திரமௌலீஸ்வரர் பூசை நாளும் செய்த பலனாக, சிறையில் அடைக்கப் பட்டிருக்கும் ஒருவர் இப்படி மற்றவர்களைப் பயமுறுத்துவது நல்ல நகைச்சுவையாக இருக்கிறது! திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோயிலில் நடக்கிற மிகப்பெரிய திருவிழா, கார்த்திக தீபப் பெருவிழா. மலையில தீபத்தை ஏற்றுவது மீனவ இன மக்கள்தான். இவர்கள் 'பர்வத ராஜகுல மரபினர்' என்று சொல்லப்படுகிறது. சில சமயம், கார்த்திகை மாசத்தில் இரண்டு கிருத்திகை வருமாம். அதில் இரண்டாவது கிருத்திகையில் தான் நேரஙகாலம் பார்த்து தீபம் ஏற்றுவார்களாம்.

இந்த ஆண்டு அப்படி ஒரே மாசத்தில் இரண்டு கிருத்திகை வநததை முன்கூட்டியே கவனிககாமல் முதல் கிருத்திகையில் தீபத்தை ஏற்றினதால்தான் சுனாமி பயங்கரம் நடந்து மீனவர்கள் வாழ்க்கையை சூறையாடிடுச்சு என்று திருவண்ணாமலை பக்தர்கள் புலம்புறாங்களாம்!

ஆக இவர்கள் கற்பனை பண்ணுகிற கடவுள் 'அப்பு'வைப் போல ஒரு பெரிய தாதாவாக இருப்பார் போல் தெரிகிறது! முடிவாக நலநடுக்கம், எரிமலை, சுனாமி போன்ற இயற்கை நிகழ்வுகளை மனிதனால் தடுக்க முடியாது என்பது உண்மையே. ஆனால் அறிவியலின் துணையோடு அவற்றை முன்கூட்டியே அறிந்து தற்பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வ தன் மூலம் அதன் தாக்கத்தை குறைக்கலாம். உயிரழிவுகளைப் பெருமளவு தவிர்க்கலாம். மதவாதிகள் நம்புவது போல் சுனாமிக்கும் சுவாமிக்கும் துளிகூட தொடர்பில்லை. பூசை செய்வதாலோ, யாகம் வளர்ப்பதாலோ, ஜெபம் செய்வதாலோ, நேர்த்தி செய்வதாலோ எந்தப் பயனும் இல்லை. புத்தியைப் பயன்படுத்தினால் மட்டுமே பயன் உண்டு.

# அலையே!

அலையே!
ஞாயிறு அன்று ஒளியிழந்தது.
அழகு தந்த அலை,
அன்று அவலம் தந்தது,
முத்து தந்த கடல்
மூக்கைச் சிந்த வைத்தது.

கடலே!
உன்னை நம்பி வாழ்ந்த மக்கள்
உயிர்பறித்ததேனோ?
உணவு தந்தாய்,
உயர்வு தந்தாய்,
உணர்வும் தந்தாய்,
ஏன் இப்போது உயிர் பறித்தாய்?

ஆடும் அலையே
இதென்ன கோரத்தாண்டவம்?
ஈவிரக்கம் இல்லாமல்
உனை ரசித்த மக்கள்
உயிர் களைந்தேனோ?

போரிலும் எமை இழந்தோம்
இன்று நீரிலும் எமை இழந்தோம்.
பாரினில் எமைப்போன்று
பாவம் செய்தவர் யார் உளர்?
சாவதற்கென்று பிறந்த
உயிருள்ள பிணம்தான் நாமோ?

ஒன்றா இரண்டா எண்ணிச்சொல்ல
அள்ளிச்சென்று நீ
அவலங்களைத் தந்துவிட்டாய்
எங்கள் குடும்ப தீபங்கள்
தாயில்லாப்பிள்ளை,
கணவன் இல்லா மனைவி
மகன் இல்லாத அன்னை
உன்னைச் சொல்லி பயனில்லை
தாயாய் உனை பாடிப்பாடி
பேயாய் போனான் தமிழன் போ!
அதிகமாய் உனைப்புகழ்ந்து
அவலப்பட்டுப்போனான் காண்!
ஊழிக்கூத்து நீயாட
உயிர் துறந்தான் தமிழன்

கடலே
உனக்காக
இன்னும் காத்திருக்கிறோம்!
உன் அழகைக்காண அல்ல!
நாம் அழ அழ
நீ எடுத்துச் சென்ற உறவுகளின்
உடலைகாண!
தருவாயா திரும்ப?

அலையே வா!
ஆனால் எல்லை தாண்டாதே!
வாசலில் நில்.
எங்கள் பாசங்களைப்பறிக்காதே!
பாசாங்கு செய்யாதே!
பாவிக் கவிஞர்களே!
பாடுவதை நிறுத்துங்கள்
இந்த பாழாய்ப்போன அலையை!
ஆடும் அலையே
இன்று நீ
எமை ஆடவைத்துவிட்டாயே.
யேசுபாலன் பாலன் பிறப்பில்
மகிழ்ச்சிக் களிப்பில் இருந்த
மக்கள் உயிர் பறித்துச் சென்றாயே!
உன் நத்தார் பரிசு
நம் உயிர்தானோ?

ரட்ணா சுவிஸ்

# நூல் நோக்கு



இலண்டன் திருமுருகன் அறிவகத்தினரால் 'அமெரிக்காவை நோக் கிய ஆன்மீகப் பயணம்' என்ற நூல் வெளி வந்துள்ளது.

அமெரிக்காவில் பரவியுள்ள இந்து மதத்தின் சிறப்புகள் பற்றி வியம்பும் இந் நூலை செஞ்சொற் செல்வன் ஆறு திருமுருகன் ஆக்கியுள்ளார். இதன் விலை 15 ரூபாவாகும்.




'சிவத்தமிழ்' என்ற ஆன்மீகக் காலாண்டு வெளிவந்துள்ளது. சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் முத்துவிழாச் சிறப்பிதழாக வெளிவந்துள்ள இந் நூலினை ஜேர்மனியில் வசித்து வரும் கலாநிதி எஸ்.சிவகுமாரன் எழுதி வெளியிட்டுள்ளார்.



யாழ்.மகளிர் அபிவிருத்தி நிலையத்தினரால் 'நங்கை' இதழ் 21/22 வெளியிடப்பட்டுள்ளது.

மகளிருக்குப் பயன்நிறைந்த பல குறிப்புகளுடன் வெளியாகியுள்ள இன் நூலின் விலை 20 ரூபாவாகும். இதன் ஆசிரியர் சறோஜா சிவச்சந்திரன் ஆவார்.




யாழ்ப்பாணம் கல்வியல் வெளியீட்டு நிலையத்தினரால் 'கல்வியாளன்' இரண்டு வெளியீடு வெளிவந்திருக்கிறது.

கலவியல பற்றிய ஆய்வுக் கண்ணோட்டங்கள், ஆலோசனைகள், அறிவுரைகள் என பல்வேறு பட்ட பயன்மிகு குறிப்புக்களுடன் வெளிவந்துள்ள இந் நூலின் பிரதம ஆசிரியர் கல்வி யியல வெளியீட்டு நிலையத்தின் தலைவர் ப.இராஜேஸ்வரன் ஆவார். இதன் விலை 200 ரூபாவாகும்.



சிவத்தமிழ் செல்வி கலாநிதி தங் கமா அப்பாக்குட்டியின் 80 ஆவது அகவை நிறைவை ஒட்டி 'வாழ்க அன்னை' என்ற நூலை சிவத்தமிழ் செல்வ' தங்கமா அப்பாக்குட்டி பிறந்த நாள் அறநிதியச் சபையினர் வெளியிட்டுள்ளனர்.


இதில் சமய, சமூகப்பெரியார்கள் பலரது வாழ்த்துரைகளும் ஆசியுரைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.



நீர்வேலி ஸ்ரீ கணேசா அறநெறிப் பாடசாலையினரால் 'மெய்கண்ட தேவர் வரலாறு' நூல் வெளியிடப்பட்டுள்ளது.

மெய்கண்ட தேவருடைய வரலாறுகளை உள்ளடக்கிய இந் நூலினை 'நீர்வை மணி' தொகுத்தளித்துள்ளார்.

இலவச வெளியீடான இது மெய்கண்டர் குரு பூசைத் தினத்தின் போது வெளியிடப்பட்டுள்ளது.



சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக் குட்டியின் 80 ஆவது பிறந்த நாளினை முன்னிட்டு 'காலம் தந்த கை விளக்கு' எனும் நூல் வெளியிடப்பட்டுள்ளது.

கலாநித மனோன்மணி சண்முகதாஸ் எழுதியுள்ள இந் நூலின விலை 150 ரூபாவாகும்.

## குழு அமைப்பு

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் தொடர்பாக கூடிய கவனம் செலுத்துவதற்கென்று விசேட குழுவொன்று ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட சிறுவர்கள் தொடர்பான தகவல்களைத் திரட்டிவரும் யுனிசெப் அமைப்பிற்கு உதவும் பொருட்டே இக் குழு அமைக்கப்பட்டுள்ளது. (ப-9)

## சட்டநிவாரணக் குழு அமைப்பு

(கொழும்பு)

கடல் பேரலையினால் அனர்த்தத்திற்குள்ளாகிய மக்களுக்கு சட்ட நிவாரண உதவிகளை வழங்குவது தொடர்பான யோசனைகளை முன்வைக்க அமைச்சரவை தெரிவுக்குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

நீதியமைச்சர் ஜோன் செனவிரதின த்லைமையிலான இந்த அமைசசரவை உபகுழுவில் அமைச்சர்களான ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே, சுமித ஜெயசேன ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இந்த உபகுழுவின் பரிந்துரைகளை கருத்தில் கொண்டு தேவையான சட்டதிருத்தங்களை மேற்கொள்ள எதிர்காலத்தில் அமைச்சரவை நடவடிக்கை எடுக்குமென்று நிதியமைச்சர் கூறினார்.

மரண அத்தாட்சிப்பத்திரங்கள் வழங்குதல் உட்பட மேலும் பல சான்றிதழ் வழங்கல்கள் குறித்த சட்ட ரீதியான தேவைகளுககாக சட்டதிருத்தங்களை மேற்கொள்ள எண்ணியுள்ளதாகவும அமைச்சர் மேலும் தெரிவிததார். (ப-9)

## சுனாமி எச்சரிக்கை மையம் 2006 நடுப்பகுதியில் இயங்கும்

(கொழும்பு)

இந்துமா கடலில் சுனாமி கொந்தளிப்பு ஏற்படக்கூடிய ஆபத்தை, முன்கூட்டியே எச்சரிக்கும் அமைப்பு, அடுத்த ஆண்டு நடுப்பகுதியளவில் ஏற்படுத்தப்பட்டு, இயங்கக்கூடிய ஏதுநிலை இருப்பதாக, யுனெஸ்கோ அமைப்பின் தலைமை இயக்குநர் கோயச்சீரோ மற்சூரா கூறியிருக்கிறார்.

சிறுசிறு தீவுகள் எதிர்நோக்கும் சவால்கள் குறித்து, மொரிஷஸ் தீவில் நடந்த அனைத்துலக மாநாடொன்றில் பேசும் போது அவர் இவ்வாறு கூறினார்.

2007 ஆம் ஆண்டளவில் அனைததுலக முன்னெச்சரிக்கை அமைப்பு இயங்கும் என்றும் மற்சூரா மேலும் குறிப்பிட்டார். (ப)

## தொண்டமான் கிழக்கிற்கு விஜயம்

(மட்டக்களப்பு)

சுனாமி பேரலைகளினால் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு மாவட்டத்தை பார்வையிடுவதற்கும் நிவாரண உதவிகள் குறித்து ஆராயவதற்கென இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகன் தொண்டமான் மற்றும் பிரதித் தலைவர் எஸ்.செல்லச்சாமி ஆகியோர் கிழக்கிற்கு விஜயம் செய்துள்ளனர்.

இதன் போது மாவட்ட அரச அதிபர் புண்ணிய கீர்த்தி தலைமையிலான குழுவினை சந்தித்து கலந்துரையாடல் ஒன்றையும் நடத்தியுள்ளனர்.

இக் கலந்துரையாடலில் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப்பாரராஜசிங்கம் தங்கேஸ்வரி ஆகியோரும் தமிழீழ விடுதலைப் புலிகளின உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். (ப-8,9)

## கிளைகள் அறிமுகம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கி பாடசாலை மாணவர்களின் சேமிப்பைத் தூண்டுவதற்காக வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்.மத்தியகல்லூரி, யாழ்.திருக்குடும்ப கன்னியர் மடம், புனித பத்திரிசியார் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் தமது கிளைகளை நிறுவியுள்ளன. (ப)

# படையினர் அர்ப்பணிப்புடன் செயற்படுவது அவசியமானது

## பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் வலியுறுத்து

(கொழும்பு)

ஆயுதப் படையினர் கல்வியறிவில் மாத்திரம் தங்கியிருப்பது அவர்களின் தொழில் முன்னேற்றத்திற்கு போதாது என பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரடணசிறி விக்கிரம நாயக்க கூறியிருக்கிறார்.

ஜனநாயகக் கோட்பாடுகள், மனித உரிமைகள் போன்றவற்றிற்கு மதிப்பளிப்பது அவசியம. அதேசமயம் ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபடாது நல்லொழுக்கமும் நற்பண்பும் உள்ளவர்களாக ஆயுதப் படையினர் விளங்க வேண்டும். அரசியலில் ஈடுபடாது இராணுவத்தினர் அர்ப்பணிப்புடன் செயற்பட்டாலே சமுதாயம் அவர்களை மதிக்கும்.

இராணுவ உத்தியோகத்தர்கள பயிற்சிக் கல்லூரியின் பட்டமளிப்பு விழாவில் கலந்து கொணடு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தொிவித்தார். பண்டார நாயக்கா சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில இது நடைபெற்றது. (ப-7)

### சுனாமி அனர்த்த நிவாரண உதவிகளில்

# ஒதுக்கப்படும் மக்களுக்கு உதவ ம.உ.ஆ. குழுவினர் நடவடிக்கை

(கொழும்பு)

சுனாமி பேரழிவு காரணமாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணங்களை சர்வதேச மற்றும் அரசால் வழங்கப்படும் உதவிகளையும் கண்காணிக்கும முகமாக விசேட செயற்குழுவொன்றினை இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழு ஸ்தாபித்துள்ளது.

கொழும்பு மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைமையகத்தில் அதன் தலைவர் ராதிகா குமாரசுவாமியின் தலைமையில் நடைபெற்ற உயர் மட்டக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, சுனாமி பேரலையினால் பாதிக்கப்பட்ட தமிழ மக்களுக்கு நிவாரண வழங்கலில் ஏற்படுகின்ற குறைபாடுகள் மற்றும் குற்றச்சாட்டுக்கள் குறித்து பிராந்திய மனித உரிமைகள் காரியாலயத்தில் தெரிவிக்கும் பட்டசத்தில் உடனடியாகக் கொழும்புத தலைமைக் காரியாலயத்துக்கு அறிவிக்கப்பட்டு தீர்வுகாணும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ப-19)

# கடலுணவுப் புறக்கணிப்பால் மீனவர்கள் பெரும் பாதிப்பு

(கொழும்பு)

கடலுணவுகளை உண்பதால் நோய்கள் ஏற்படுமென்று மக்கள் அச்சமடையத் தேவையில்லையென விஞ்ஞானத் தொழில் நுட்பத்துறை அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

கடல் உணவுகளை உட்கொண்டால் நோய்கள் ஏற்படுமென மக்கள் தற்போது அச்சம் கொண்டுள்ளார்கள். கடல் உணவுகளினால் நோய்கள் ஏற்படுவதற்கு வாய்ப்பு இல்லை. கடலுணவை மக்கள் புறக்கணிப்பதால் மீன்பிடித் தொழிலாளர்கள் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

ஏற்கனவே, சுனாமி அலைகளினால் பாதிக்கப்பட்ட மீன்பிடித் தொழிலாளர்கள் தற்போது மக்கள் கடல் உணவுகளைப் புறக்கணிப்பதால் தமது வாழ்க்கையை கொண்டு செல்வதற்கு கஷ்டப்படுகிறார்கள்.

நாட்டில் மீன்களை பதனிடும் வசதிகள் பெருமளவில் இல்லாத காரணத்தினால், தற்போது பிடிக்கப்படும் மீன்கள் பெருமளவில் வீணாகி வருகின்றன என்று அமைசசர் மேலும் தெரிவித்தார். (து-9)

### 'சுனாமி' அலையால் சேதமடைந்த

# துறைமுகங்களைப் புனரமைக்க அரசாங்கம் துரித நடவடிக்கை

(கொழும்பு)

சுனாமி கடற்பேரலைகளால் பாதிககப்பட்ட அனைத்துத் துறைகளையும் கட்டியெழுப்பும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட அமைச்சுக்கள் இதற்கான திட்டங்களை சமர்ப்பித்திருப்பதாக, தேசத்தைக் கட்டியெழுப்பும் ஜனாதிபதி செயலணி அறிவித்திருக்கின்றது.

அமைச்சுக்களால் சமர்ப்பிக்கப்படட இத்திட்டங்களை தேசிய அனர்த்த செயலணியும், திறைசேரியின் தேசிய திட்டமிடல் திணைக்களமும் பரிசீலிக்க இருக்கின்றன.

இத்திட்டங்கள பாிசலிக்கபபட்ட பின் அவை ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டு அலோசனை பெற்றுக்கொள்ளப்படும்.

ஜனாதிபதியின் பரிந்துரைகளுடன் கூடிய இறுதித்திட்டம் எதிர்வரும் 1ஆம் திகதி வகுக்கப்பட்டு அனர்த்த முகாமைமத்துவ தேசிய குழுவின் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படும்.

இந்தக் குழுவில் அனைத்து அரசியல் கட்சிகளும் அங்கம் வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. குறித்த திட்டங்களை அமுல் செய்வது தொடர்பாக வெளிநாட்டு நன்கொடை அமைப்புக்கள் உள்ளிட்ட சகல நிறுவனங்களோடும் தற்போது கலந்துரையாடப்பட்டு வருகின்றது. (ப-4)

## ஆத்ம பிரார்த்தனை

சுனாமி பேரனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்காகவும் உயிரிழந்தவர்களின் ஆத்ம சாந்திக்காகவும் ஆத்ம பிரார்த்தனை நிகழ்வு ஒன்று இடம்பெறவுள்ளது.

இருபாலை கிழக்குப் பழைய வீதியில் உள்ள ஸ்ரீசுப்பிரமணிய கோட்டத்தில் நாளை பிற்பகல் 3.00 மணியளவில் இப் பிரார்த்தனை இடம்பெறவுள்ளது. (ப-74)

## இன்று ஒரு தகவல்

# வளரும் உறுப்புக்கள்

'இந்த உலகத்தில் பல்லியாகப் பிறந்திருக்கலாம் பாவம் மனிதனாகப் பிறந்து விட்டேன்' என்று கவலைப்பட்டுக் கொண்டே வந்தார் ஒருவர். "ஏன் இப்படிச் சலித்துக் கொள்கிறீர்கள்?" என்று கேட் டேன். "பின்னே என்ன சார்.... இதோ பாருங்கள் எனது கையை? என்று காட்டினார். பார்த்தால்.... விரலில் ஏதோ கட்டுப்போட்டிருக்கிறார். "ஏன் எங்கேயாவது தவில் வாசிக்கப் போகிறீர்களா?" என்றேன். "என் வயிற்றெரிச்சலைக் கிளப்பாதீர்கள் சார்! நான் ஏற்கனவே நொந்து போயிருக்கிறேன். என் விரலும் நொந்து போயிருக்கிறது" என்றார்.

"விரலுக்கு என்ன ஆனது சொல்லுங்கள் சார்" என்றேன். கதவின் இடுக்கில் கையை வைத்து விட்டேன்! கதவு பத்திரமாக இருக்கிறது. விரல் நசுங்கி விட்டது" என்றார். "வெறுமனே கதவிடுக்கில் கையை வைத்தால் அது நசுங்கிப் போய் விடுமா?" என்றேன். ஒரு கையை கதவிடுக்கில் வைத்தேன். அது நினைவில் இல்லாமல் இன்னொரு கையால் சாத்தினேன். வலித்த பிறகுதான் தெரிந் தது... இன்னொரு கை அங்கே இருக்கும் விடயம் என்றார். "அது சரி... இப்போது எப்படி இருக்கிறது நிலைமை" என்றேன். டாக்டரிடம் போனேன் படம் பிடித்துப் பார்த்தார். இப்போது கெடு வைத்திருக் கிறார் என்றார். யாருக்கு ? என்றேன். விரலுக்குத் தான்... இந்த விரலை சேர்த்துக் கொள்வதா இல் லையா என்று பின்னர் முடிவு செய்யலாம் என்றார்.

அது இருக்கட்டும்... இந்த உலகத்தில் பல்லியாகப் பிறந்திருக்கலாம் என்று புலம்பிக் கொண்டே வந்தீர்களே அது எதற்கு என்று கேட்டேன். அதே கதவில் ஒரு பல்லி அடிக்கடி வாலைக் கொடுத்து விடும்... அப்போதெல்லாம் கதவிடுக்கில் சிக்கி வால் துண்டாகி விழுந்து விடும். ஆனால் பாருங்கள்... அதே பல்லிக்கு வால் மீண்டும் முளைத்து விடும். ஆனால் எனது நிலைமையைப் பாருங்கள்... இந்த விரலை எடுத்துவிட்டால் மறுபடியும் முளைக்குமா? போனது போனதுதானே! அதன்பின் நான் நான்கு விரலுடன் நடமாட வேண்டியது தானே! ஏன் சார் பல்லியின் வாலைவிட மனிதனின் விரல் மட்டமா கிப் போனதே சார் என்றார்.

அவரது கஷ்டம் அவருக்கு... அதனால் அவர் பாட்டுக்குப் புலம்பிக் கொண்டேயிருக்கிறார்... அவர் ஒரு பக்கம் புலம்பிக்கொண்டே இருக்கட்டும்... அதற்கிடையில் நான் உங்களுக்கு ஒரு தகவலைச் சொல்லி விடுகிறேன்.

மனித உறுப்புகள் துண்டிக்கப்பட்டால் அது மீண்டும வளர்வதில்லை. ஆனால் மரக்கிளையை வெட்டினால் அது மீண்டும் வளர்ந்து விடும். நம்மிடம் இல் லாதது அவற்றிடம் அப்படி என்ன அதிகமாக இருக் கிறது. தாவரங்கள் வளர்வதற்குக் காரணமாக இருப் பது மெரிஸ்டம் என்ற செல்கள். நாம் கிளையை வெட் டினாலும் சரி இலையைக் கிள்ளினாலும் சரி இந்த மெரிஸ்டம் செல்கள் சும்மா இருக்காது உடனே வளர ஆரம்பிக்கும். வளர்ந்து புதுக் கிளையை உண்டாக் கும். புது இலையை உண்டாக்கும்.

நமது உடம்பில் அதுபோன்ற மெரிஸ்டம் செல் இல்லை. அதனால் கை கால் போனால் மீண்டும் வளரும் அதிஷ்டமும் இல்லை. பல்லி, மண்புழு போனற சில விலங்கினங்களுக்கு இந்த செல் உள்ளது. அதனால் தான் பல்லி கவலைப்படாமல் கதவிடுக்கில் கொண்டு போய் வாலை வைக்கிறது. வால் துண்டாகிப் போனாலும் 'செயற்கை வால்' எங்கே கிடைக்கும் என்று தேடிக் கொண்டு போக வேண்டிய் அவசியமில்லை.

என்ன சார் யோசிக்கிறீர்கள்? நமக்கும் இந்த மெரிஸ்டம் செல் இருந்தால் நன்றாக இருக்குமென்றா? கதவிடுக்கில் ஒரு கை இருக்கும் போது இன்னுமோர் கையால் அதே கதவைச் சாத்தக் கூடாது என்று தெரியாவிட்டால் அவன் என்ன சார் மனிதன்! ஆனால் ஒன்று காலம் போகும் போக்கில் வன்முறைகள் அதிகரித்து விட்டன. மனிதன் அடிக்கடி கையை இழப்பதும் காலை இழப்பதும் சகஜமாகிவிட்டது.

செயற்கைக் கால் செயற்கைக் கை என்று தேடி அலையவேண்டிய அவசியமும் ஏற்பட்டுவிட்டது. அதனால் இனிமேல் பிறக்கும் மனிதர்கள் மெரிஸ்டம் செல்லுடன் பிறந்தால் நலமாக இருக்கும். படைப்புத் தொழிலில் ஈடுபட்டிருப்பவனுக்கு இந்தத் தகவல் காதில விழுந்தால் மனிதனின் இந்தக் கோரிக்கையை அவசியம் அவன் பரிசீலிக்க வேண்டும்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# அமைச்சர் ரிஷாத் பதியுதீன் முல்லை மாவட்டத்திற்கு விஜயம்

## தளபதி கேணல் சூசையுடனும் பேச்சு

(புத்தளம்)

புனாவாழ்வு, வன்னி மாவட்ட அபிவிருத்தி அமைச்சர் ரிஷாத் பதியுதீன் கடந்த புதன்கிழமை விடுதலைப் புலிகளின் கடல் புலித்தளபதி கேணல் சூசையினை சந்தித்து கடல் அழிவால் பாதிக்கப்பட்டுள்ள பிரதேசங்களை மீளக்கட்டியெழுப்புவது குறித்து பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

வன்னி மாவட்ட தமிழ் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் கனகரத்தினத்தின் அழைப்பையடுத்து புதன் கிழமை அமைச்சர் பதியுதீன் 15 பேரடங்கிய குழுவுடன் முல்லைத் தீவிற்கான விஜயத்தை மேற்கொண்டார்.

அதேவேளை, அமைச்சரினால் எடுத்துச் செல்லப்பட்ட இரு லொறிகளினாலான நிவாரணப் பொருட்களை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திடம் கையளித்த அமைச்சர், விடுதலைப் புலிகளின் முல்லைத்தீவு மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் முகுந்தன், சமாதானச் செயலகப பணிப்பாளர் மாறன் ஆகியோரை சந்தித்து தற்போது மேற்கொள்ளப்படுகின்ற நிவாரணப்பணிகள குறித்தும் கேட்டறிந்து கொண்டார்.

அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த நிலையில் வாழும் மக்கள் தங்கியிருந்த பாடசாலை மற்றும் பொது இடங்களுக்கும் விஜயம் செய்த அமைச்சா ரிஷாத் பதியுதீன், மக்கள் எதிர்நோக்கும் அடிப்படைப் பிரச்சினைகள் குறித்தும் நேரில் கண்டும் கேட்டும் அறிந்து கொண்டார்.

முல்லைத்தீவு கரையோரப் பிரதேசத்திற்கும் சென்ற அமைச்சர் தலைமையிலான குழுவினர் அழிவுக்குளளாகிய அரச கட்டடங்கள், குடியி ருப்புக்கள் என்பவற்றை பார்வையிட்டதுடன் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு விஜயம் செய்தனர்.

கடல்புலித் தளபதி கேணல் சூசையினை அவரது கள்ளப்பாடு காரியாலயத்தில் வைதது சந்தித்த அமைச்சர் பதியுதீன், சேதம் ஏற் பட்டுள்ள பிரதேசங்களை புனரமைத்து அப்பகுதியில் மக்களை மீளக்குடியேற்றுதல் குறித்து விடுதலைப்புலிகள் மேற்கொண்டுளள செயற் திட்டங்கள் பற்றியும் கேட்டறிநது கொண்டதுடன் தமது அமைச்சின் மூலம் இப் பணிகளுக்கு உதவக்கூடிய வழி வகைகள குறித்து கவனம் செலுத்தியுள்ளதாக கேணல் சூசையிடத்தில் அமைச்சர் தெரிவித்தார்.

இந்த விஜயத்தின் போது அமைச்சருடன் தொழில் அதிபர் யூசுப்.கே.மரைக்கார், செய[illegible] ளர்களான அலிகான் ஷரீப், எம்.இப்றாகீம், ஜனூபர் ,முன்னாள் பாராளுமனற உறுப்பினர் எம்.என்.அய்றுப், இளைஞர் சேவை அதிகாரி எம்.முனவ்வரும் இணைந்து கொண்டனர்.(ப-15)

### சுனாமி அனர்த்த பணியில் ஈடுபடும் போராளிகளுக்கு

# படையினரால் இடையூறு வராது

# அம்பாறை கட்டளைத்தளபதி உறுதி

(அம்பாறை)

ஆழிப்பேரலையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப்பணிகளில் ஈடுபட்டுள்ள விடுதலைப புலி போராளிகளுக்கு இனிவரும் காலத்தில் விசேட அதிரடிப்படையினரால் எத்தகைய இடையூறு களும் ஏற்படாது என விசேட அதிரடிப்படை யின் மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட கட்ட ளை அதிகாரி உபுல செனவிரத்ன உறுதிய ளித்துள்ளார்.

நேற்று முன்தினம் இலங்கை போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவின் அலுவலகத்தில வடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளுக்கும் விசேட அதிரடிப்படையின் அதிகாரிகளுக்குமிடையில் சந்திப்பு இடம்பெற்றது.

இந்த சந்திப்பில் குறிப்பாக நிவாரணப பணிகளில் ஈடுபட்டுள்ள தமது போராளிகளும், தமிழர் புனர்வாழ்வுக் கழகம் போன்ற தொண் டர் அமைப்புக்களின் பிரதிநிதிகளும் எதிர் நோக்கி வருகின்ற பிரச்சினைகள் குறித்து விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சுட்டிக்காட் டினார்.

நிவாரணப் பணிகளில் ஈடுபட்டிருந்த தமது பெண போராளிகள் அணிந்துள்ள இடுப்புப் பட்டிகளை அகற்றுமாறும், இந்தப்பட்டி அணிந்தவாறு நிவாரணப் பணிகளில் ஈடுபடவோ தமது பிரதேசத்தில் நடமாடவோ அனுமதிக்க முடியாது என்று விசேட அதிரடிப் படையினர் கூறிவருவது பற்றியும் அவ[illegible] எடுத்துக் கூறினார்.

இதனையடுத்து, இனிவரும் காலத்தில் இப்படியான சம்பவங்கள் இடம்பெறமாட் டாது என்ற உத்தரவாதத்தை விசேட அதிரடிபபடைக் கட்டளை அதிகாரி வழங்கியுள் ளார்.

இதேவேளை, காரைதீவுப் பிரதேசத்தில் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினால் பராமரிக்கப்பட்டு வரும் முகாம்களிலிருந்த அகதிகளை அங்கிருந்து வெளியேறுமாறு விசேட அதிரடிப்படையினர் அச்சுறுத்தி வருவதாக தமிழர் புனர்வாழ்வுக்கழகம் குற்றம்சாட்டியுள்ளது.

(ப)

## இராசி பலன்

**15.01.2005** (தை 2 சனிக்கிழமை)

**பஞ்சமி காலை 8.29 மணிவரை**
**பூரட்டாதி பிற்பகல் 12.31 மணிவரை**
**இராகுகாலம் 9.34 -11.04 மணிவரை**
**சுபநேரம் 03.34 - 05.04 மணிவரை**
**சஷ்டி விரதம்**
**கோமாதா பொங்கல்**

| | |
|---|---|
| மேடம் | உறவினர் சந்திப்பு, முயற்சி தாமதம், கோபப்படுதல், விவாதம். |
| இடபம் | தொழில் முன்னேற்றம், பணவருவாய், குடும்ப நன்மை, தனவரவு. |
| மிதுனம் | பிறர் உதவி, அதிக பிரயாசை, சுப நிகழ்வு, நல்ல முயற்சி. |
| கடகம் | புதிய திட்டமிடல், காரிய தாமதம், அமைதிக்குறைவு, பிரயாணம். |
| சிங்கம் | வேலைச் சுமை, எதிர் பாராத பிணக்கு, காரிய தாமதம், தெய்வ சிந்தை. |
| கன்னி | பிரயாண நன்மை, நண்பர்கள் சந்திப்பு, தொழில் சேர்க்கை, முயற்சி கைகூடும். |
| துலாம் | பகைவர் நேசம், காரிய சித்தி, தொழில் நன்மை, நல்ல வரவேற்பு. |
| விருச்சிகம் | முயற்சி தாமதம், தெய்வ சிந்தை, போசன சுகம், மனச் சஞ்சலம். |
| தனுசு | தாய்வழி உறவு, உஷ்ண வியாதி, புதிய விடயம், காரிய தாமதம். |
| மகரம் | தொழில் சிறப்பு, முயற்சி கைகூடும், உறவினர் உதவி, செல்வாக்கு. |
| கும்பம் | தனவிரயம், புதிய வார்த்தை, காரிய அலைச்சல், அதிக செலவு. |
| மீனம் | தன விரயம், புதிய சிந்தை, போசன சுகம், நல்ல முயற்சி |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது - வளவன்

# 'இயற்கைப் பதிவு' போட்டி யாழ். மாணவி முதலிடம்



(யாழ்ப்பாணம்)

தேசிய ரீதியில் பாடசாலை மாணவர்களிடையே நடாத்தப்பட்ட 'இயற்கைப் பதிவேடு' தொடர்பான செயல் முறைப் போட் டியில் யாழ்.மாவட்டத்தில் செல்வி குழந்தைவேலு லக்ஷாயினி முதலாம் இடம் பெற்றுள்ளார்.

இவர் யாழ்.கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலய தரம் 11 மாணவி. கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மண்டபத்தில் இவருக்கான வெற்றிக் கேடயத்தையும் சான்றிதழையும் விஞ்ஞான அமைச்சர் வழங்கி கெளரவித்துள்ளார்.

(இ)

ஆற்றுவார் ஆற்றல் பசிஆற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின் - குறள்

வலம்புரி

## பேதமைகளைக் களைந்து நிவாரணப் பணியை ஆரம்பிக்குக

வடக்குக் கிழக்குப் பகுதிகளில் விடுதலைப் புலிகளுடன் இணைந்து நிவாரணப் பணியை மேற்கொள்வதற்கு அரசு சம்மதம் கொண்டுள்ளதாக அரசின் சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால அறிவித்துள்ளார்.

சுனாமி அனர்த்தம் ஏற்படுத்திய பேரழிவுகளில் இருந்து மக்களை மீட்டெடுக்கும் விடயத்தில் உள்நாட்டு மக்களும், வெளிநாடுகளும் பெரும் நிவாரணப் பணியை வழங்கிவருகின்றன. இழப்புக்களின் மத்தியிலும் இத்தகைய நிவாரணப் பணிகள் ஆறுதல் தருவதாக இருக்கின்றது.

இருந்தும் நிவாரணக் கொடுப்பனவுகள் பாதிக்கப்பட்ட மக்களை சென்றடைவதில் இருக்கக்கூடிய மதங்கள் கவலையளிப்பதாக உள்ளது. சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பணிகள் அனைத்தும் முப்படைகளிடம் ஒப்படைக்கப்படுவதாக ஜனாதிபதியின் அறிவிப்பு நிலைமையை மேலும் இறுக்கமாக்கியது.

இப்போது அரசும் விடுதலைப் புலிகளும் இணைந்து வடக்குக் கிழக்கில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பணிகளை மேற்கொள்வது என்ற முடிபை அரசு எடுத்திருப்பது ஓர் சாதகமான மாற்றம் எனக் கருதலாம்.

அதாவது வடக்குக் கிழக்குப் பகுதியில் முப்படையினர் நிவாரணப் பணியை மேற்கொள்வதென்பது எவ்வகையிலும் சாத்தியமற்றதொன்று. அத்தகைய தீர்மானத்தை நடைமுறைப்படுத்த அரசு முற்பட்டிருக்குமாயின் நனைத்துச் சுமப்பதாக நிலைமை மாறியிருக்கும்.

இத்தகையதோர் சூழ்நிலையில் அரசும் விடுதலைப் புலிகளும் இணைந்து நிவாரணப் பணிகளை மேற்கொள்வது என்ற அரசின் முடிவானது ஜனாதிபதி விடுத்த அறிவிப்பில் இருந்து முன்னேற்றமானதென்பது மட்டும் இப்போதைக்கு கூறக்கூடியதாகும்.

இதேவேளை சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பணி தொடர்பில் விடுதலைப் புலிகள் தமது தரப்பு நிலைப்பாட்டை ஐயம் தெளிவுற முன்வைத்துள்ளனர்.

அவர்களின் அறிவிப்பில் நிவாரணப் பணிகளை எவரும் மேற்கொள்ளமுடியும். ஆனால் நிவாரணப் பணிக்கென்று ஒவ்வொரு நலன்புரி முகாம்களிலும் அமைக்கப்பட்டுள்ள குழுவே அதற்குப் பொறுப்பாக இருக்கும்.

இந்த முடிபு விடுதலைப் புலிகளால் ஏற்கனவே வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இம் முடிபு குறித்து அரசு ஆராய்வது நிவாரணப் பணியை ஒழுங்காகவும், விரைவாகவும் மேற்கொள்வதற்கு வசதியாக இருக்கும்.

வடக்குக் கிழக்கு தமிழ் மக்களைப் பொறுத்தவரை அவர்கள் விடுதலைப் புலிகள் மீது பூரணமான நம்பிக்கை கொண்டுள்ளனர். எனவே அவர்கள் மூலமாக நிவாரணப் பணியை மேற்கொள்வதானது ஏற்றுக்கொள்ளக்கூடியதொன்றாகும்.

இதுபற்றி அரசு சிந்திப்பது அவசியமாகும். தேவையாயின் வடக்குக் கிழக்கில் நிவாரணப் பணிகளை மேற் கொள்வதற்கு வசதியாக பாராளுமன்றத்தில் 22 ஆசனங்களைக் கொண்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரையும் விடுதலைப் புலிகளுடன் இணைத்து நிவாரணப் பணியை மேற்கொள்ளும் திட்டத்தை அறிமுகப்படுத்தலாம்.

இந்த நடவடிக்கையை அரசு எடுக்குமாயின் அது நாட்டின் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் விடயத்திலும் சாதகமான முடிபுகளைத் தரும். ஆக, "சுனாமி அழிவுக்கான நிவாரணப் பணிகளை படையினர் மேற்கொள்வது முறையன்று" என கண்காணிப்புக் குழுத் தலைவர் அபிப்பிராயம் தெரிவித்திருக்கையில்,

வடக்குக் கிழக்கில் மேற்கொள்ளப்படும் நிவாரணப் பணிகளில் அரசு புறம் காட்டுமாயின் - புறக்கணிக்குமாயின் அதற்கு சர்வதேச சமூகம் இடம்தராது என்ற கனடா எம்.பி. ஜிம்ஹரியானிஸின் கருத்துக்கள் சற்று ஆறுதல் தருவதாக இருப்பினும் பேதமைகளைக் களைந்து பாதிக்கப்பட்ட சகல மக்களுக்கும் நிவாரணக் கொடுப்பனவுகள் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

## சுனாமி கடற்பேரனர்த்தங்களின் தாக்கத்தால்

# தமிழ் பிரதேச பாடசாலைகளுக்கு மட்டும் 500 மில்லியன் பெறுமதியான சொத்தழிவு

(கொழும்பு)

**ஆழிப்பேரலையின் கொரூரத்தில் தமிழர் பிரதேசமான வடக்கு-கிழக்கு மாகான பாடசாலைகளே பாரியளவில் பாதிப்புகளுக்குள்ளானதாக கல்வி அமைச்சின் புள்ளிவிபரம் ஒன்று தெரிவிக்கின்றது.**

நாட்டின் பாடசாலைகளுக்கு ஏற்பட்ட மொத்த இழப்பின் 70 சதவீதமானது தமிழர் பிரதேசத்திலேயே ஏற்பட்டுள்ளதுடன் இவ் இழப்பு 500 மில்லியன் ரூபாய்களுக்கும் மேலானது என்றும் இலங்கையின் கல்வி அமைச்சு கணிப்பீடு செய்துள்ளது.

இலங்கையின் அனைத்து மாகாணங்களிலும் முற்றாக சேதமடைந்த 59 பாடசாலைகளில், வடக்கு-கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த 41 பாடசாலைகள் முற்றாக சேதமடைநதுள்ளன. இது மொத்தத் தொகையின் 70 சதவீதமானதாகும். இதுதவிர, சில பகுதிகள் மட்டும் சேதமடைந்த 104 பாடசாலைகளில், வடக்கு-கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த 73 பாடசாலைகள் சேதமடைந்துள்ளன. இதுவும் மொத்தத் தொகையில் 70 சதவீதமானதாக உள்ளது.

அம்பாறையில் மட்டும் 14 பாடசாலைகள் முற்றாக சேதமடைந்திருப்பதுடன், 24 பாடசாலைகளின் சில பகுதிகளும் சேதமடைந்துள்ளன. இதுபோன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டும் 15 பாடசாலைகள் முற்றாக சேதமடைந்திருப்பதுடன், 18 பாடசாலைகளின் சில பகுதிகளும் சேதமடைந்துள்ளன.

பாதிக்கப்பட்ட மாணவர்களை கருத்தில் எடுப்பின், மொத்தமாக பாதிக்கப்பட்ட 77,161 மாணவர்களில் 40,000க்கும் மேலானவர்கள் தமிழர் பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள். இவர்களில் கிட்டத்தட்ட 18,000 வரையிலானவர்கள் அம்பாறை மாவட்டத்தினையும், 11,514 மாணவர்கள் மட்டக்களப்பு மாவட்டத்தினையும் சேர்ந்தவர்கள்.

கல்வி அமைச்சின் கணிப்பீட்டின் படி, தமிழர் பிரதேசங்களான வடக்கு-கிழக்கு மாகாணப் பாடசாலைகளுக்கு ஏற்பட்டுள்ள மொத்த இழப்பு மட்டும் 500 மில்லியன் ரூபாய்களுக்கும் மேல்வரும் எனவும் கணிப்பிடப்பட்டுளது. (ப)

# சுனாமியால் பாதிக்கப்பட்ட ஊழியர்களின் விபரங்களைச் சமர்ப்பிக்கக் கோரிக்கை

(சுதுமலை)

வடக்கு-கிழக்கு மாகாண சபையின் கீழ் உள்ள மாவட்ட அமைச்சுகள் உள்ளூராட்சி மற்றும் அரச திணைக்களங்களில் கடமை புரியும் ஊழியர்கள் கடந்த மாதம் 26ஆம்திகதி கடல் அலை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டிருப்பின் அது தொடர்பான முழு விபர அறிக்கைகள் உடன் அனுப்பி வைக்குமாறு வடக்கு-கிழக்கு மாகாண பொது நிர்வாக அமைச்சின் ஆணையாளர் திருமதி கமலா சிவசிதம்பரம் கடிதம் மூலம் சகல நிறுவனத் தலைவர்களுக்கும் கடிதம் மூலம் அறிவுறுத்தியுள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அண்மையில் நிகழ்ந்த கடல் அலை அனர்த்தம் காரணமாக வடக்கு-கிழக்கு மாகாண சபையின் கீழ் பணிபுரியும் பலருக்கு பொருள்,உடமைகள், உபகரணங்கள், கட்டடங்கள், உயிரிழப்புகள் என்பன ஏற்பட்டுள்ளது.

எனவே இவை தொடர்பான விபரங்களை இக்கடிதத்துடன் படிவங்களில் பூரணப்படுத்தி திணைக்களத் தலைவரின் சிபார்சுடன் நிறுவன தலைவர் ஊடாக விரைவில் அனுப்பி வைக்குமாறும் அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப-252)

# கிழக்கு – தெற்கிற்கே கனேடிய பிரதமர் விஜயம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு கனேடியப் பிரதமர் போல் மார்ட்டின் செல்ல மாட்டார் என அரச வானொலி தெரிவித்துள்ளது.

கனேடியப் பிரதமர் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளும் போது விடுதலைப்புலிகளின் கட்டுபபாட்டுப் பகுதிக்கும் செல்ல வேண்டும் என கனடா வாழ் தமிழர்களும், விடுதலைப்புலிகளும் கோரியுள்ளனர்.

இதுதொடர்பாக கருத்து வெளியிட்ட கனேடியப் பிரதமா, தமது இலங்கை விஜயம் தெற்கு,கிழக்குப்பகுதிகளுக்கு மாத்திரமே அமையும் என செயதியாளாகளிடம் தெரிவித்துள்ளார் என அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனேடிய அ[illegible]ின் உதவியுடன் அம்பாறை மாவடடத்தில் மேற்[illegible]பட்டு வரும் நிவாரண நடவடிக்கைகளை அவர் பார்வையிடுவார் என்றும்,

நிவாரண வேலைகள் த[illegible]ப்திகரமாக அமைகின்றனவா என்பதை அறியும் பொருட்டு அங்கு அரசாங்க அதிகாரிகள், அரசியல்வாதிகள் மற்றும் தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகளையும் சந்தித்துக் கலந்துரையாடுவார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு தமது நாட்டின் நிவாரண உதவிகள் வழங்கப்படுவதில் எவ்வித தடைகளும் இல்லை என்றும் கனேடியப் பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளதாக அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-4)

# இராணுவ பௌசர் -மினிபஸ் விபத்தில் மூவர் காயம்

(யாழ்ப்பாணம்)

பயணிகளுடன் சென்ற மினிபஸ்ஸும் இராணுவ தணணர் பௌசரும் விபத்துக்குள்ளானதில் மூன்று பயணிகள் படுகாயமடைந்தனர்.இச்சம்பவம் நேற்று முன்தினம் எழுதுமட்டுவாழில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணத்தில் இருந்து முகமாலை நோக்கிச் சென்று கொண்டிருந்த மினிஸ்பஸ இராணுவ தண்ணீர் பௌசரை முந்திச்செல்ல முற்படுகையிலேயே இச் சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

விபத்தில் படுகாயமடைந்த மூவரும் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

திருநெல்வேலியைச் சேர்ந்த வெற்றிவேல் ஜெயதர்ஷன (வயது 20) சாவகச்சேரியைச் சேர்ந்தவர்களான ஜெயரட்ணம் தற்பரன் (வயது 21), ஏ.ஜெயக்கமஷன் (வயது 30) ஆகிய மூவருமே படுகாயமடைந்தவர்களாவர்.

இவ் வபத்துச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ச-5)

## ௐ தினசரி தியானம்

## விவேகச் சிந்தனைகள்

உலகங்கள் வரும் போகும் அதனால் என்ன? ஆன்மா வாழ்கிறது. விரிவடைந்து கொண்டே இருக்கிறது. உலகங்கள் ஆன்மாவிற்குள் நுழைந்தாக வேண்டும். கடலில் நீர்த்துளிகள் மறைவது போன்று அவை அங்கே மறைந்தாகவும் வேண்டும். அந்த உலகமா ஆன்மாவின் இலட்சியமாக இருப்பது! நான் என்னை ஜடப்பொருளுடன் ஒன்றுபடுத்திக் கொண்டு அதன் விளைவுகளை அனுபவிக்கிறேன். இதுவே என் துன்பத்திற்கான காரணம்.

சுவாமி விவேகானந்தர்

# கொழும்பில் துப்பாக்கிச் சூடு ஸ்தலத்தில் ஐவர் பலி

கொழும்பில் நேற்று முன்தினம் இடம் பெற்ற இருவேறு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் ஐவர் உயிரிழந்தனர்.

மட்டக்குளியில் பாதாள உலகக் குழுவினரின் வீடொன்றை பொலிஸார் முற்றுகையிட்ட போது இரு தரப்பினருக்கிடையே ஏற்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் மூன்று பாதாள உலகக் குழுவினர் பலியாகினர்.

அதேவேளை களுத்துறை அளுத்கமவில் இடம் பெற்ற மற்றொரு துப்பாக்கிச் சூட்டச் சம்பவத்தில் உகண்டா நாட்டு பிரஜை ஒருவரும் மற்றொருவரும் பலியாகினர்.

தனிப்பட்ட விரோதம் காரணமாகவே இவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். சுட்டுக் கொல்லப்பட்ட உகண்டா பிரஜை காலஞ்சென்ற உகண்டா நாட்டு ஜனாதிபதி இடி அமீனின் ஆட்சிக்காலத்தில் அங்கிருந்து பாதுகாப்புக்காக இலங்கைக்கு வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச-04)

# பொங்கு தமிழ் நிகழ்வின் நான்காம் ஆண்டு நிறைவு

தமிழீழ விடுதலைப்புலிகளை ஏகப்பிரதிநிதிகளாக ஏற்றும் சுயநிர்ணய உரிமை, தனித் தேசிய இனம், மரபுவழித்தாயகம் என்பவற்றை வலியுறுத்தியும் தமிழ் மக்களால் ஆரம்பிக்கப்பட்ட 'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்வின் 4ஆம் ஆண்டு நிறைவு நாள் எதிர்வரும் திங்கட்கிழமை கொண்டாடப்படவுள்ளது.

இதற்கான ஏற்பாட்டை யாழ். பல்கலைககழக சமூகம் மேற்கொண்டுள்ளது. யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் எஸ.செல்வக்குமார் தலைமையில் யாழ். பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில இந் நிறைவு நாள் கொண்டாடப்படவுள்ளது.

இந்நிகழ்வில் விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸ் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பலகலைக்கழக சமூகம், விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொள்ளவுள்ளனர். (ச)

# தமிழர் புனர்வாழ்வு கழகம் கனேடிய எம்.பியுடன் பேச்சு

(கிளிநொச்சி)

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் தலைவர் கே.பி. றெஜியை கனேடியபாராளுமன்ற உறுப்பினர் ஜிம் கரியானிஸ் நேற்று சந்தித்துப் பேசினார்.

இச் சந்திப்பு கிளிநொச்சியிலுள்ள தமிழர் புனர்வாழ்வுக் கழக தலைமைச் செயலகத்தில் இடம் பெற்றுள்ளது.புனர்வாழ்வுக் கழகத்தின்பணிகள, முன்னெடுப்புகள்அதன் எதிர்காலத்திட்டங்கள் என்பன குறித்து கரியானிஸ் கேட்டிறிந்து கொண்டார்.

கனேடிய அரசின் உதவிகள் மற்றும் அங்கு புலம்பெயர்ந்து வாழும் தமிழ்மக்களின் உதவி குறித்து றெஜி நன்றி தெரிவித்தார்.

கனடாவில் இயங்கும் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் கிளை தொடர்ந்தும் பல ஆண்டுகளாக சமூக சேவை அமைப்பாக அங்கீகரிக்கப்படவில்லை என பாராளுமன்ற உறுப்பினரிடம்றெஜி கவலை வெளியிட்டார். (ச)

London Language School

"The School with golden touch" (golden touch)

புத்தம் புதிய ஆண்டில் புதிய பிரிவுகள்

Foundation English for A/L
Communication English
IELTS/ TOEFL
FRENCH

FREE

புதிய பிரிவுகளுக்கான இலவச விரிவுரைகளும், மற்றும் புதிய பிரிவுகளும் எதிர்வரும் 16/01/2005 அன்று 10.30க்கு ஆரம்பமாகின்றது.

பதிவுகளை முன்கூட்டியே செய்பவர்களுக்கு 50% கழிவு வழங்கப்படும். "சுனாமி பேரனர்த்தத்தினால் அல்லலுறற உறவுகளிற்கான நிவாரணப் பணியில் இணைந்திருந்தமையினால் வகுப்புக்கள் இடைநிறுத்தப்பட்டிருந்தன. தற்பொழுது அனைத்து வகுப்புக்களும் வழமைபோல் மீண்டும் நடைபெறுகின்றன"

தொடர்புகளுக்கு:-
0777-222300, 0777-238605, 0776176383
Addresses: No 774, Hospital Rd Jaffna
Pacific Net Computers
No 01-Brown Rd
Jaffna
T.P - 021 222 6413, 0777 - 763781 (C-1003-க)

## எழிலனை...

சோதனையிட வேண்டும் என்றும் பிரயாணப் பையினை வானில் இருந்து இறக்கி எடுத்து வந்து ஒப்படைக்க வேண்டும் எனவும் கோரியுள்ளனர்.

ஆனால் எழிலனோ தான் விடுதலைப் புலிகளின் மாவட்ட அரசியல் துறை பொறுப்பாளர் என தெரிவித்ததுடன் வேண்டுமானால் வானுக்குள் வந்து பிரயாணப்பையினை சோதனையிடுமாறும் கூறி வானிலிருந்து இறங்க மறுத்துத் தெரிவித்தார்.(ச)

## முல்லைத்தீவு...

கனேடிய அரசும் மக்களும் இந்த உதவிகள் சமமாகப் பகிர்ந்தளிப்பதில் அவதானமாக உள்ளனர். தான் ஊடக விளம்பரங்களுக்காக அல்லாமல் நீண்ட காலஉதவித் திட்டங்களுடனேயே இங்கு வந்தேன் எனவும் கூறினார்.

எதிர்வரும் திங்கட்கிழமை கனடிய பிரதமர் இலங்கைக்கு வரும் போது, இங்கு தான் பிரயாணம் செய்து அறிந் தவற்றையும் அரசியற்துறைப் பொறுப்பாளருடன் கலந்துரையாடியவற்றையும்அவரிடம் எடுத்துக் கூறப் போவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## பாதிக்கப்பட்ட...

குறைக்க முடியும்.

உரியபன்முகப்படுத்தலில் மீள்கட்டுமான பணிகளை முன்னெடுப்பதன் மூலமே பாதிப்புக்களை புனரமைத்து அதில் வெற்றி காண முடியும் என ஐரோப்பிய ஒன்றியம் நம்புகின்றது என்றும் ஐரோப்பிய ஒன்றியம் தனது அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளது. (இ-04)

## அமெரிக்க...

கள் இல்லை என இலங்கை அரசு அறிவித்திருந்தது. இதனைக் கருத்தில் கொண்டு ஆகாய மார்க்கமாக உதவுவதற்காக தாம் கிழக்கு மாகாண கடற்பரப்புக்கு செல்வதாக அவர் தெரிவித்தர். நிவாரண விநியோகம் முடிவடைந்ததும் மீண்டும் தென்பகுதிக் குத் திரும்பும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-04)













# ஜேம்ஸ் மொறிஸ் இன்று இலங்கை வருகிறார்

(கொழும்பு)

உலக உணவுத்திட்டப்பணிப்பாளர் ஜேம்ஸ் மொறிஸ் இன்று இலங்கை வருகிறார்.

இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளும் அவர் சுனாமியால் பாதிக்கப்பட்ட இடங்களை நேரில் சென்று பார்வையிடவுள்ளார்.

உலக உணவுத்திட்டத்தினால, பாதிக்கப்பட்டவர்களுக்கு என வழங்கப்பட்டு வரும் உதவிகளையும் அவர் பார்வையிடவுள்ளார்.

இதேவேளை பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்குவது தொடர்பாக யாழ்ப்பாணம், திருகோணமலை, முல்லைத்தீவு, அம்பாறை மற்றும் காலி ஆகிய பிரதேசங்களில் உலக உணவுத்திட்டத்தின் அலுவலகம் அமைப்பது தொடர்பாகவும் அவர் ஆராயவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இலங்கையில் பாதிக்கப்பட்ட 7 லட்சத்து 50 ஆயிரம் பேருக்கு தேவையான உணவுப் பொருட்களை உலக உணவுத் திட்டம் அனுப்பிவைத் திருந்தமை குறிப்பிடத்தக்கது,(ச-5,04)

# பட்டிப் பொங்கல், 'கோ' பூசை இன்று யாழில் நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

பட்டிப் பொங்கலும் கோபூசையும் இன்று பிற்பகல் 2 மணிக்கு யாழ்ப்பாணம் சத்திரச்சந்தி ஞான வைரவர் தேவஸ்தானத்தில் பசுக்கள், இடபங்கபளைப் பாதுகாக்கும நிறுவனங்களின் இணையத்தலைவர் சைவப்புலவர் சு.செல்லத்துரை தலைமையில் நடைபெறவுள்ளது.

அத்துடன் கோமாதா நூல் வெளியீட்டு விழாவும் நடைபெறவுள்ளது. பசு இடபங்களைப் பாதுகாக்கும் சமய நிறுவனங்களின் அமைப்பாளர் கு.கங்கைவேணியன் நூலினை வெளியிட்டுவைக்க முதற்பிரதியினை சிவா நறுமணப் பூங்கா உரிமையாளர் து.குருநாதசிவம் பெறவுள்ளார்.

வெளியீட்டு உரையினை யாழ்.பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி மா.வேதநாதனும் ஆய்வுரையினை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிக்கல்விப் பணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கமும் ஆற்றுவர். (ச)

# மனித உரிமைக் குழுவினர் வடமராட்சிக்கு விஜயம்

(மருதங்கேணி)

மனிதஉரிமைகள் ஆணைக்குழுவின் பிரதிநிதிகள் நேற்று வடமராட்சிக்குச் சென்றனர்.

சுனாமி கடல் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களின் உடைமைகளை சட்ட விரோதமாக எடுத்து படையினர் காவலரண்களை அமைத்து வருகின்றரெனஅப்பகுதி மக்களால் மனிதஉரிமைகள் ஆணைக்குழுவில் முறையிடப்பட்டது. (ச-4)

## அரசின்...

பின்னரே மீனவர்களை அங்கு குடியமர்த்த வேண்டும் என ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒவ்வொரு விதமான நடவடிக்கைகளை அரசாங்கம் கடைப்பிடிப்பது யதார்த்தமற்றது என்று விக்கிரமசிங்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-08)

## அரசு-புலிகள்...

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணப்பணிகள் தொடர்பான செயற்படுத்தல், கட்டுமானம் குறித்து அரசின் சமாதான செயலகம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. அவ்வறிக் கையிலேயே மேற் கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

சுனாமி அனர்த்த பாதிப்புக்களுக்குப் பின்னர் நம்பிக்கையூட்டும் வகையில் நிவாரணப்பணிகள் இடம் பெற்றுவருவதாக குறிப்பிட்ட ஜயந்ததனபால மேலும் கூறுகையில்,

சுனாமி அனர்த்த நிவாரணப் பணிகளில் அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்றுவதில் விடுதலைப்புலிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். அத்துடன் அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் மீண் டும் ஒரு போரில் ஈடுபடுவதில் அக்கறையற்று இருக்கின்றன.

இந்நிலைமை சமாதான முனனெடுப்புக்களின் புதிய நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

வடக்குகிழக்கு மாகாணத்தில் சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் புனரமைப்பு மீள் கட்டுமானம், நிவாரணப்பணிகள் ஆகியவை மிகவும சிறப்பாக நடைபெறு கின்றன.

இப்பணிகளை முன்னெடுக்கும் செயலணிக் குழுவில் விடுதலைப புலிகளின் பிரதிநிதி களும் இணைக்கப்பட்டுள்ளனர்.

இதனால் அரசுக்கும் விடுதலைப்புலிகளும் இடையே நிவாரணப்பணிகள் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வசதியாக அரச சமாதான செயலகத்துக்கும் புலிகளின் சமாதான செயலகத் துக்கும் இடையே அவசர தொலைபேசி இணைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதன்மூலம் இருதரப்பும் தமது தேவைகளை பரிமாறி நிவாரணப் பணிகளை முன்னெடுக்க தொடர்பாடல் வசதிசெய்யப்பட்டுள்ளது.

இந்நிலைமை இருதரப்புக்கும் இடையே நம்பிக்கையை கட்டியெழுப்பியுள்ளது. விடுதலைப் புலிகளின் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் புனரமைப்பு மற்றும் நிவாரணப்பணிகளை செயற்றிறன் மிக்கதாக செயற்படுத்தி வருகின்றனர் என்றும் குறிப்பிட்ட ஜயந்த தனபால அரச சமாதான செயலகமும் புலிகளின் சமாதான செயலகமும் மிகவும ஒற்றுமையுடன் பணியாற்றி வருகின்றதெனவும் கூறினார். (இ-04)

பதவி வெற்றிடம்

பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- பாதுகாப்பு உத்தியோகத்தர்(ஆண், பெண் இருபாலாரும்)
- சிற்றூழியர்கள்(ஆண்கள் பகல், இரவுக்கடமை)

தகுதியானவர்கள் 18.01.2005 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நேரில்வரவும்

ஆளணி முகாமையாளர்
(வலம்புரி)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.01.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.